# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## விசுவாசத்தினாலே

### எரிகோ பட்டணத்தின் மதில்கள் விழுந்தது

எபிரெயர் 11:30


**TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE**

May - June 2018
Volume : 58

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 3

## AGTBC பட்டமளிப்பு விழா – மதுரை 27.2.2018













## MABC பட்டமளிப்பு விழா – சென்னை 26.3.2018











ஆசிரியரிடமிருந்து........!

# விசுவாசத்தினால் தடைகளை மேற்கொள்ளுங்கள்

**விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது. எபிரெயர் 11:30**

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவன் வாக்குப்பண்ணின பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கும் தேவ ஜனங்களுக்கும் நடுவே எரிகோ கோட்டை தடையாக நின்றது. எரிகோ பெரிதும் ஜெயிக்க முடியாதது போலும் காணப்பட்டது. இன்றும் நம் வாழ்வில் தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களையும் திட்டங்களையும் அடைய முடியாதபடி தடைகளைச் சத்துருக் கொண்டு வரலாம். குடும்ப பிரச்சனைகள், பொருளாதார பிரச்சனைகள், சரீர பலவீனங்கள், பாவ சோதனைகள் போன்ற தடைகள் நம் முன் நிற்கலாம். அவைகளை விசுவாசத்தின் மூலம் மேற்கொள்ள முடியும் என வேதம் கூறுகிறது. யோசுவா 5,6 அதிகாரங்களிலிருந்து விசுவாசத்தினால் தடைகளை அகற்றவும், மேற்கொள்ளவும் வேதம் கூறும் 5 ஆலோசனைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**1. விசுவாசத்தின் அதிபதி (CAPTAIN OF FAITH)** (யோசுவா 5:13-15)

தேவ ஜனங்கள் யோர்தானை கடந்து வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரிக்க ஆயத்தப்படுத்தும் போது எரிகோ என்ற பட்டணம் பெரிய தடையாக முன் நின்றது. யோசுவா இந்த பிரச்சனையை சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று உருவின பட்டயம் ஏந்திய ஒருவர் அவன் எதிரே வந்து நின்றார். யோசுவா அவரை முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டான். யோசுவாவுக்கு காட்சியளித்த இவர் கர்த்தராகிய தேவன். யோசுவா எரிகோவை பார்த்து திகைத்து கொண்டிருந்த வேளையில் அவன் கண்கள் சேனையின் அதிபராகிய கர்த்தரை நோக்கியது. ஆம். நம்முடைய கண்களை தேவன் மேல் வைப்போம். தடைகளையும், பிரச்சனைகளையும் பெரிதுப்படுத்தாமல், விசுவாசத்தை துவக்குபவரும் முடிப்பவருமாகிய தேவன் மேல் நம் கண்கள் இருக்கட்டும் (எபி.12:1). உங்கள் பிரச்சனையை பெரிதுபடுத்தாமல், அதைக் குறித்தே சிந்தித்துக்கொண்டிருக்காமல், உங்கள் பிரச்சனைகளை காட்டிலும் தேவன் பெரியவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவர் சொல்வதை கேட்க ஆயத்தமாயிருங்கள்(வச.14). அவர் ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்பவர். அவரை ஆராதியுங்கள். உங்கள் விசுவாசம் வளருவதை காண்பீர்கள்!

**2.விசுவாசத்தின் கீழ்ப்படிதல் (COMPLIANCE OF FAITH)** (யோசு. 6:1-5)

அடுத்ததாக, விசுவாசத்தின் கீழ்ப்படிதலை யோசுவா 6:1-5 வசனங்களில் காண்கிறோம். இங்கு கர்த்தர் யோசுவாவுக்கு சில வெற்றி

பெறுவதற்கான சில ஆலோசனைகளைக் கொடுக்கிறார். இந்த ஆலோசனைகள் மிகவும் வினோதமாக இருக்கிறது. படை தளபதியான யோசுவாவுக்கு இது முட்டாள் தனமாக தோன்றியிருக்கும். தேவன் இங்கு எரிகோவை மேற்கொள்ள பள்ளத்தாக்குகளையோ சுரங்கப்பாதைகளையோ வெட்டச் சொல்லவில்லை. குண்டு போட்டு தகர்க்கவும் சொல்லவில்லை. எரிகோ கோட்டையை சும்மா ஏழு நாட்கள் சுற்றி வாருங்கள், அது இடிந்து விழும் என்று கூறுகிறார். மனிதனின் பார்வைக்கு இது விசித்திரமாக இருக்கிறது. ஆனால் தேவன் தரும் ஜெயத்தை பெறுவதற்கு அவரின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம். நம்முடைய வழிகள் அவருடைய வழிகளல்ல (ஏசாயா 55:8). விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் (ஆபகூக் 2:4). முழுமையான, கேள்விக் கேட்காத கீழ்ப்படிதலை தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார். தேவ சத்தம் கேட்டு, அனுதினமும் அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறீர்களா? அப்படியானால், நிச்சயம் தேவன் உங்களுக்கு ஜெயம் தருவார்.

### 3. விசுவாசத்தின் விடாமுயற்சி (CONTINUANCE OF FAITH) (யோசுவா 6:10-15)

நம்முடைய கண்கள் விசுவாசத்தை துவக்குகிற இயேசுவின் மேல் இருக்க வேண்டும். அவரது சத்தம் கேட்டு கீழ்படிய வேண்டும். ஏனெனில் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று வேதம் கூறுகிறது (யாக்.2:20). மூன்றாவதாக, விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். யோசுவா 6:10-15 வசனங்களில் அவர்கள் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருந்தார்கள். முதல் நாள் ஒன்றும் நடைபெறவில்லை. இரண்டாம், மூன்றாம்... ஆறாம் நாள் வரை சுற்றியும் ஒன்றும் நடைபெறவில்லை, சிலர் யோசித்திருக்கலாம். ஐயோ, போதும் எனக்கு இனிமேல் முடியாது என்று. தேவ ஜனமே, அவர்கள் ஆறுநாள் சுற்றி சோர்ந்து போயிருப்பார்களானால் ஒன்றும் நடந்திருக்காது. தேவன் அவர்களுக்கு பொறுமையை, கர்த்தருக்குக் காத்திருத்தலை கற்றுக் கொடுக்கிறார். கர்த்தருக்குக் காத்திருக்கிற நேரம் வீணானது அல்ல. விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா 28:16). அவருக்கு காத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள் (ஏசாயா 30:18). அவருக்கு காத்திருக்கிறவர்கள் புதுப் பெலன் அடைவார்கள் (ஏசாயா 40:31) என்று வேதம் கூறுகிறது. இதை வாசிக்கிற நீங்கள் சோர்ந்து போய் இப்போது உட்கார்ந்திருக்கலாம். தேவப் பிள்ளையே, விட்டு விடாதே, தொடர்ந்து தேவன் சொன்னதை செய்து கொண்டிரு. சோர்ந்து போகாதே. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம் என்று வேதம் கூறுகிறது (கலா. 6:9).

### 4. விசுவாசத்தின் வார்த்தை (CONFESSION OF FAITH) (யோசுவா 6:16)

எரிகோ கோட்டை இடிந்து விழுவதற்கு முன்பே, கர்த்தர் பட்டணத்தை உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் என்று யோசுவா கூறுகிறான் (யோசுவா 6:16). ஏன் இப்படி சொன்னான் தெரியுமா? யோசுவா 6:2ல் எரிகோவை உன் கையில் ஒப்புக் கொடுத்தேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தார். ஆகவே விசுவாசம் என்றால் என்ன? கர்த்தர் சொன்னதை அறிக்கை செய்வது. கர்த்தர் சொன்னதை அப்படியே நம்புவது (யோவான் 4:50). எபிரெயர் 13:5,6 யை பாருங்கள். அங்கு கூறப்பட்டுள்ள ஒரு காரியம் நம் விசுவாசத்தை வளரச் செய்யும். "நீங்கள் பண ஆசையில்லாத வர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.'' இந்த வசனத்தில் ''சொல்லியிருக்கிறாரே''என்ற வார்த்தையை கோடிட்டு கொள்ளுங்கள். இப்பொழுது அடுத்த வசனத்தில், "அதினாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர் என்று சொல்லலாமே" என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் "அவர்

சொல்லியிருக்கிறார் … நாம் தைரியங்கொண்டு சொல்லலாமே.” இதுதான் விசுவாச அறிக்கை. அவர் சொன்னதை தைரியமாக விசுவாசத்தோடு சொல்ல வேண்டும்.

**5. விசுவாசத்தின் வெற்றி (CONQUEST OF FAITH)** (யோசுவா 6:20)

இறுதியாக, “எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; மகா ஆராவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்து விழுந்தது.” ஜனங்கள் பட்டணத்தை பிடித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரை நோக்கி பார்த்து, தேவ சத்தம் கேட்டு, அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடி செய்தால், உங்கள் முன்பாக நிற்கும் எரிகோக்கள் இடிந்து விழும். உங்கள் முன் நிற்பது எப்படிப்பட்ட தடையாக இருந்தாலும் தேவன் அதை அகற்றுவார்.

தேவ ஜனமே, உங்கள் முன் நிற்கும் தடைகள் பெரிதும் மேற்கொள்ள முடியாதது போலும் இருக்கிறதா?கவலைப்படாதீர்கள்! தேவன் மேலும் அவருடைய வார்த்தை மேலுமுள்ள உங்கள் விசுவாசம் தடைகளை தகர்த்து போடும். நீங்கள் விசுவாசித்தால் நிச்சயம் தேவனுடைய மகிமையை காண்பீர்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.

---

**தாய்மார்கள் தினம்**
மே 13, ஞாயிறு




**தகப்பனார்கள் தினம்**
ஜீன் 17, ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்!**




**பெந்தெகொஸ்தே நாள்**
மே 20, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**



# தலைமைத்துவம்


**Rev. L. ஜெயபாலன்**

உபதலைவர், தமிழ் பிரதேச ஏ.ஜி. நிர்வாகக்குழு


ஐரோப்பாயில் பயணம் செய்த குழுவினர் அங்கிருந்த ஒரு சிறிய ஊருக்குச் சென்றனர். அந்த ஊரின் வாசலருகே முதியவர் ஒருவர் அமர்ந்திருந்தார். “இங்கு தலைவர்கள் பிறந்திருக்கிறார்களா” என பயணி முதியவரிடம் வினவினார். அதற்கு அவர் தலைவர்கள் பிறந்ததாக எனக்கு தெரியவில்லை என பதிலளித்தார். ஆச்சரியமடைந்த பயணி “இங்கு ஒரு தலைவர் கூட பிறக்கவில்லையா?” என வினவ மறுமொழியாக “இங்கு சிசுக்கள் தான் பிறந்தது எனக்குத் தெரியும்” என பதிலளித்தார். இது எவ்வளவு உண்மையிலும் உண்மை .

தலைவர்கள் பிறக்கவில்லை. ஆனால் அவர்கள் உருவாகின்றனர் என ஒருவர் கூறியுள்ளார். "Leaders are not born but they become." நாம் உலகத்தின் எப்பகுதிக்குச் சென்றாலும் தாயின் வயிற்றிலிருந்து சிசுவாக பிறக்கிறவர்கள் தலைவர்களாக பிறப்பதில்லை. காலா காலத்தில் அவர்கள் தலைவர்களாக உருவாகின்றார்கள். தலைவர்கள் எந்திர மனிதர்களைப் போன்று (Robots) உருவாகுவது இல்லை. பெற்றோரின் முன் மாதிரி, போதனை, பள்ளிகூட கல்வி அல்லது உலக அனுபவம், தெய்வ நம்பிக்கை, விடாமுயற்சி, பயிற்சி நேரத்தை சரிவர உபயோகித்தல், எல்லாவற்றிற்கு மேலாக கடவுளின் அருள் ஆகியவைகளின் அடிப்படையில் தலைவர்கள் உருவாகின்றனர்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் ஆளுகை (கர்த்தத்துவம்) அவர் தோளின் மேல் இருக்கிறது என ஏசாயா 9:6-ல் கூறுகிறது. "The Government shall be upon His shoulders" இயேசு கிறிஸ்து மனுமைந்தனாக இவ்வுலகில் அவதரிக்கும் முன்பே, அவருடைய ஆளத்துவம், ஆளுகை, அதிகாரம் போன்றவை வெளிப்படுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்து இளவயது முதற்கொண்டே பரிசுத்தாவியானவரின் வல்லமையால் தேவனின் தெய்வீகத் திட்டத்தில் உருவாக்குவதற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். “இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்திலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார்” என வேதாகமம் கூறுகிறது (லூக்கா 2:52). ஆவிக்குரிய தலைவர்களுக்கு சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்துவே. அவர்களிடத்தில் கீழ்க்கண்ட பண்புகள் காணப்பட்டன.

**பரிசுத்தம் :** பரிசுத்தம் என்பது கடவுளின் பண்புகளில் ஒன்று. அது இயேசுவிடம் காணப்பட்டது. “உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்” (லூக்கா 1:35). இயேசு கிறிஸ்து வாழ்க்கையிலும் வார்த்தைகளிலும் பரிசுத்தமுள்ளவராக இருந்தார்.

**அன்பு :** அன்பு என்ற வார்த்தை தெய்வீகமானதாகும். காதல், பாசம், நேசம் போன்ற வார்த்தைகள் எல்லாவற்றிற்கும் மேற்பட்டதாகும். “தேவன் அன்பாகவே இருக்கிறார்” என பைபிள் கூறுகிறது. அந்த தெய்வீக அன்பு இயேசு கிறிஸ்துவில் முழுமையாக காணப்பட்டது.

**உண்மை :** இயேசு தாம் சொன்னதைச் செய்தார். செய்ததை சொன்னார். "என்னிடத்தில் பாவம் உண்டென்று யாரால் சொல்ல முடியும்" என சவால் விட்டார். எல்லாவற்றையும் நன்றாய் செய்தார் என மக்கள் அவரைக் குறித்து சாட்சி பகன்றார் (மாற்கு 7:37).

**தாழ்மை :** இயேசு கிறிஸ்துவின் தாழ்மை ஒவ்வொரு தலைவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றாகும். நான் சாந்தமும் மனதாழ்மையுமாய் இருக்கிறேன் என இயேசுவால் கூற முடிந்தது (மத்தேயு 11:29).

**இரக்கம் :** இயேசு கிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்தில் "இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று போதித்தார். அது அவருடைய இரத்தத்தில் ஊறியிருந்தது. தனது போதனையிலும் சாதனையிலும் இளகிய குணமுள்ளவராயிருந்தார். திரளான ஜனங்களை கண்ட போதிலும், வேதனையில் இருந்த விதவையைக் கண்ட பொழுதும் அவர் மனதுருகினார். அவருடைய மனதுருக்கம் ஒரு செயலை செய்ய அவரை நடத்தியது.

**கண்டிப்பு :** இரக்கத்தில் ஐசுவரியரான இயேசு கிறிஸ்து தவறுகளை கண்டபொழுது கண்சாடையாக பார்த்தும் பார்க்காதவர் போல் இராமல் அதை உடனே கண்டிக்கிறவராக இருந்தார். "மாயக்காராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ!" என கூறினார் (லூக்கா 11:44).

**மன்னிப்பு :** தெய்வீக அன்பை வெளிப்படுத்தின இயேசுகிறிஸ்து தேவனின் மன்னிக்கும் பண்பையும் வெளிப்படுத்தினார். விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட பெண்ணை குற்றம் சுமத்தின யூதர்கள் விபசாரத்தில் ஈடுபட்ட ஆடவனை (மனிதனை) கொண்டு வரவிலலை. இயேசு அந்தப் பெண்ணை மன்னித்து "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை நீ போ இனி பாவஞ்செய்யாதே'' என கூறினார் (யோவான் 8:11). தலைவர்களாக இருப்பவர்களுக்கு மன்னிக்கும் சிந்தையும் இருக்க வேண்டும். மறக்கும் சிந்தையும் இருக்க வேண்டும். பழிவாங்கும் சிந்தை இருக்கக்கூடாது.

தலைவர்களாக இருக்க வாஞ்சிக்கிறவர்கள் ''நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" என ஜெபிக்க வேண்டும். தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார். ....தமக்குச் சித்தமானவனை.... அதிகாரியாக்குகிறார் என்பதை உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர வேண்டும் (தானி.5:19,21). ஒவ்வொரு தலைவனும் மேல் சொல்லப்பட்ட பண்புகளை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டும்.

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# தேவன் உங்களைப் பயன்படுத்த முடியும்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நமது ஆண்டவராகிய இயேசு நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்த விரும்புகிறார். யோவான் 6:1-13 வசனங்களில் ஒரு சிறு பையனையும் அவனுக்கு உண்டானதையும் தேவன் பயன்படுத்துகிறதை நாம் காண முடியும். அதிலிருந்து சில உண்மைகளை கீழே காணலாம்.

## இயேசு திரள்கூட்டம் மக்களைக் கண்டு மனதுருகினார்

இயேசுவும், சீடரும் சாப்பிட நேரமெடுக்க முடியவில்லை. திரள்கூட்ட ஜனங்களுக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தனர். சற்று ஓய்வு எடுப்போம் என்று இயேசு கூறினார். அவர்கள் படகில் ஏறி அக்கரைக்கு பயணமானார்கள். இயேசு அக்கரை அடையுமுன்னரே ஏராளமான மக்கள் அவருக்கு முன்னே ஓடி காத்திருந்தனர். இயேசு களைப்பாயிருந்தாலும் மக்களுக்காக மனதுருகினார்.

## போதனை செய்தார்

மக்களுக்குத் தேவையான சத்தியங்களை பகிர்ந்து கொண்டார். ஜனங்களின் உண்மையான தேவை ஆவிக்குரிய ஆகாரம். அதை அவர் அவர்களுக்கு பகிர்ந்தளித்தார். எவ்வளவு நேரம் பிரசங்கித்தார் என்று சொல்லப்படவில்லை. ஆனால் வெகுநேரம் சென்றது என்று கூறப்பட்டுள்ளது. ஜனங்கள் ஆர்வத்துடன் அவருடைய போதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சீஷர்கள் இயேசுவிடம் வந்து மக்கள் பசியுடன் இருக்கின்றனர். அவர்களை போய் சாப்பிட அனுப்பிவிட வேண்டும் என்று இயேசுவிடம் கூறினர். இயேசுவும் ஜனங்களுக்கு உதவி செய்ய விரும்பினார்.

## நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்

திரள்கூட்டம் மக்களுக்கு சீஷர்களே உணவு கொடுக்கக் கட்டளையிட்டார். இது சாத்தியமல்ல என்று சீஷர்கள் கூறினர். எவ்வளவு பணம் தேவைப்படும். அது நம்மிடம் இல்லையே என்று அவர்கள் பதிலளித்தனர். இயேசு ஒன்றை கூறினால் அதில் ஒரு பொருள் இருக்கும்.

நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்று இயேசு கட்டளையிட்டபோது அவர்களுக்கு பணம் கொடுத்து அனுப்பவில்லை. இயேசுவின் கட்டளை சாத்தியமற்றதாய் தோன்றலாம். ஆனால் அவர் கட்டளையிட்டால் அதற்கு வழியை வைத்திருப்பார்.

## உங்களிடத்தில் இருப்பதைக் கொடுங்கள்

அவர்கள் கூட்டத்தில் விசாரித்ததில் ஒரு பையனிடம் 5 அப்பம் 2 மீன்கள் இருப்பதைக் கண்டார்கள். இயேசுவிடம் இதை தெரிவித்தனர். பல்லாயிரம் மக்களுக்கு உணவு கொடுக்க ஒரு சிறுவனிடமுள்ள மதிய உணவு எப்படி சாத்தியம் என்று எண்ணினார்.

### அவன் ஒரு சிறுவன், அவனிடமிருந்ததும் கொஞ்சம்

ஊர்பேர் தெரியாத ஒரு சிறுவன், அவன் எந்த ஊரிலிருந்து வந்தான். என்ன படிக்கிறான் என்று ஒன்றுமே தெரியாது. அவனிடமிருந்ததும் மிக கொஞ்சம்.

இயேசு யாரையும் பயன்படுத்த முடியும் என்பதற்கு இது ஓர் உதாரணம். இயேசு பெரியவர்களையும் பயன்படுத்த முடியும். எல்லாராலும் புறக்கணிக்கப் பட்டவர்களையும் பயன்படுத்த முடியும். அந்தக் கூட்டத்தில் படித்தவர்கள், பணக்காரர்கள், திறமையுள்ளவர்கள் பலர் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் முன்வரவில்லை. இந்தச் சிறுவன் மட்டுமே தன்னிடம் இருப்பதை கொடுக்க முன்வந்தான். அவனிடமிருந்ததும் மிக கொஞ்சம். ஆனால் அதைக் கொடுக்க முன்வந்தான்.

இதை வாசிக்கும் சகோதர, சகோதரிகளே நீங்கள் சாதாரண ஆளாக இருக்கலாம். உங்கள் படிப்பு, பட்டம், திறமை மிக கொஞ்சமாக இருக்கலாம். உங்கள் சபையில் நீங்கள் யார் என்றே தெரியாமல் இருக்கலாம். ஆனால் இயேசு உங்களையும் பயன்படுத்த முடியும் என்று உணருங்கள்.

### 5 அப்பம், 2 மீன் இயேசுவின் கையில் கொடுக்கப்பட்டது

எவ்வளவு சிறியதாய் இருந்தாலும் இயேசு பயன்படுத்த முடியும். எவ்வளவு சிறிய மனிதரையும் இயேசு பயன்படுத்த முடியும். ஒரு பெரிய கோலியாத்தை ஜெயிக்க ஒரு சிறு கூழாங்கல்லை தேவன் பயன்படுத்தினார். ஒரு கழுதை தாடை எலும்பை பயன்படுத்தி 1000 பெலிஸ்தியரை கொல்ல முடியும்.

சீனாவில் சாதாரண வாலிபப் பெண்களைக் கொண்டு பெரிய அற்புதங்கள் நடைபெறுவதாக கேள்விப்படுகிறோம். தேவன் எதையும் பயன்படுத்த முடியும். யாரையும் பயன்படுத்த முடியும். நம்மிடம் எது இல்லையோ அது அவரிடம் இருக்கிறது. அவருக்கு ஒப்புக்கொடுத்தால் போதும், அவர் எடுத்து பயன்படுத்துவார்.

### இயேசு அப்பங்களை எடுத்து ஆசீர்வதித்தார்

இயேசுவின் கரத்தில் இருப்பது பெரிய ஆசீர்வாதம். இயேசுவின் கரத்தில் இருப்பது பெரிய பாக்கியம். இன்று நீங்கள் இயேசுவின் கரத்தில் இருந்தால் நிச்சயம் பயன்படுவீர்கள். நாமும், நம்முடைய குடும்பமும் கர்த்தருடைய கரத்தில் இருந்தால் பாக்கியம் பெற்றவர்கள். அதுவே பாதுகாப்பான இடம்.

### இயேசு அப்பத்தை பிட்டார்

பயன்பட வேண்டுமென்றால் பிட்கப்பட வேண்டும். பிட்கப்படுதல் என்பது வேதனையின் அனுபவம். நிறையப் பேர் இயேசுவால் பயன்பட விரும்புகிறார்கள். ஆனால் பாடுகளை சகிக்க ஆயத்தமில்லை. அப்பம் பிட்கப்படும்போது, அது துணிக்கையாக மாறும். தனித்தன்மை இழக்கும். இதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும். நம்முடைய பெயர் சொல்லப்படாமலிருக்கலாம். நாம் யார் என்றே தெரியாமல் போகலாம். தேவன் பயன்படுத்துவதற்கு இதுவே ஏற்ற தகுதி.

தேவன் பயன்படுத்திய பரிசுத்தவான்களெல்லாம் பல சந்தர்ப்பங்களிலும் உடைக்கப்பட்டனர். பல பாடுகளுக்கு ஊடாகச் சென்றனர். பவுல், பேதுரு, தோமா போன்றோர் உடைக்கப்படடனர். ஆதி சபை விசுவாசிகள் உடைக்கப்பட்டனர். இரத்த சாட்சியாய் மதித்தவர்கள் பல விதங்களிலும் உடைக்கப்பட்டார்கள்.

### பரிமாறும்படி சீஷர்களிடம் கொடுத்தார்

இயேசுவின் கையில் 5 அப்பம் 2 மீன்தான் இருந்தது. அவர் பிட்கப்பிட்க அவை பெருகின. பிட்கப்படும்போதுதான் பெருக்கம் உண்டாகிறது.

இயேசு சிலுவையில் நமக்காக பிட்கப்பட்டார். உங்களுக்காக பிட்கப்படுகிற

என் சரீரம் என்றார். இயேசு கிறிஸ்து பிட்கப்பட்டதால்தான் நாம் இன்று இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அவர் சிந்திய இரத்தத்தால்தான் நாம் மீட்கப்பட்டிருக்கின்றோம்.

**மீதமிருந்த துணிக்கை 12 கூடை**

எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. யோவான் 6:11-ல் வேண்டிய மட்டும் கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. யோவான் 6:12-ல் அவர்கள் திருப்தியடைந்த பின்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாரும் திருப்தியாய் சாப்பிட்டார்கள் என்பதற்கு அடையாளம் மீதி இருப்பது தான். அதனால்தான் மீதியான துணிக்கைகளை சேகரிக்க கட்டளையிட்டார். ஆண்கள் மட்டுமே ஐயாயிரம் பேர். பெண்கள், சிறுபிள்ளைகள் எத்தனை ஆயிரமோ!

இயேசுவிடம் கொடுக்காமலிருந்தால் அது ஒரு சிறு பையனுக்கு மட்டும் பயன்பட்டிருக்கும். இயேசுவிடம் கொடுக்கப்பட்ட போதோ அது பல்லாயிரம் மக்களுக்கு பயன்பட்டது.

உங்கள் வாழ்க்கையும், இதுபோலவே இயேசுவின் கரத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

உங்களை பல்லாயிரங்களுக்கு பயன்படுத்துவார்!


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484

# கனி தரும் கிறிஸ்தவ வாழ்க்கை



ஒவ்வொரு கிறிஸ்தவனும் கனி தர வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கனி நிறைந்த வாழ்க்கை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் முதிர்ச்சியையும் காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கை ஆவியின் கனிகள் நிறைந்ததாக இருக்க கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டும் என்று வேதம் கூறுகிறது.

1. **கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.** ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என இயேசு சொன்னார் (யோவான் 15:5). யோவான் 15 : 1-10 வசனங்களில் நிலைத்திருத்தல் என்ற வார்த்தை 10 முறை வருகிறது. நிலைத்திருத்தல் (Abiding) என்றால் தேவனோடு நெருங்கிய பிரியாத உறவு கொள்ளுதலாகும்.
2. **ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.** ஆவியின் கனி கொடுக்க ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம். (எபே. 5:18; கலா. 5 : 22, 23).
3. **சுயத்திற்கு மரிக்க வேண்டும்.** கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிடில் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும் (யோவான் 12 : 24). தேவ ஆவியினால் நிரப்பப்பட்டுக் கனிகொடுக்க, மாம்சத்தை தினமும் சிலுவையில் அறைந்து சுயத்திற்கு அனுதினமும் சாகவேண்டும்.
4. **வேதத்தை தியானித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.** கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன், நீர்க்கால் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கும் மரத்தைப் போல் இருப்பான் என்று வேதம் கூறுகிறது (சங். 1: 2,3).
5. **சபை ஐக்கியம் வேண்டும்.** திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியமும், போதனையும் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கும், கனிதருவதற்கும் மிகுந்த அவசியம் (அப். 2: 42-44).
6. **தேவன் மேல் எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும்.** கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தப்பாமல் எப்பொழுதும் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது (எரே.7: 8).
7. **தேவன் நம்மைப் பரிசுத்தமாக்க இடமளிக்க வேண்டும்.** தேவன் நம்மைத் தம்முடைய வார்த்தையின் மூலமாகவும் (எபி.4:12; யோவான் 15:2). உபத்திரவங்களின் மூலமாகவும் (எபி.12:11, யோபு 23:10) புடமிட்டுப் பரிசுத்தமாக்க விரும்புகிறார். நாம் இச்சமயங்களில் முறுமுறுக்காமல் அவரைத் துதித்து அவர் தம்முடைய கிரியையை நம் வாழ்வில் நிறைவேற்ற இடமளிக்கும்போது நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

## ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளங்கள்

1. முதிர்ச்சியுள்ள கிறிஸ்துவன் தன் எஜமானனைப் (இயேசுவை) பிரியப்படுத்தி வாழுவான். அவரைப் போல மாற முயற்சிப்பான் (லூக்கா 6:40). இயேசு பிதாவுக்கு பிரியமானவைகளை மட்டும் செய்தார் (யோவான் 8:29; கலா.1:10).
2. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எளிதாகக் கள்ள உபதேசங்களால் வஞ்சிக்கப்பட மாட்டான் (எபே.4:11-15). அவன் சத்தியத்தை நன்கு அறிந்து, தவறான உபதேசங்களை வெறுத்து விலகி வாழுவான் (சங்.119:104, ரோமர் 12:9).
3. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறிகிறவனாக இருப்பான் (எபி.5:11-6:1). தேவ வசனத்தை ஜாக்கிரதையாகப் படிக்கும்போது அது நம்மை தேறினவர்களாக மாற்றும். சரியான தீர்மானங்கள் எடுக்க உதவி செய்யும் (2 தீமோ.3:16).
4. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் உபத்திரத்தைக் கண்டு அஞ்சமாட்டான் (யாக்கோபு 1 : 4-5). உபத்திரவம் வரும் என்பதை அறிந்திருப்பான் (அப். 14:22). அதில் பொறுமையாயிருப்பான் (ரோமர்12:12). அதில் சோர்ந்து போக மாட்டான் (1 பேதுரு 1:6,7; 12-16).
5. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனின் இருதயம் கர்த்தருக்கு நேராகச் செம்மையாயிருக்கும் (1 நாளா. 28:9; 1 இராஜா 8:61). தன் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுவான். (நீதி. 4:23). ஆவிக்குரிய காரியங்களிலும் மேலானவைகளிலும் தன் இருதயத்தை வைத்திருப்பான் (கொலோ. 3:1,2).
6. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளரப் பிரயாசம் எடுப்பான் (2கொரி.7:1). விசுவாசத்தில் வளர்ந்து கொண்டே இருப்பான். தேவனுக்குப் பிரியமில்லாத தகாத உறவுகள், பேச்சுக்கள், நடத்தைகளை விட்டு விலகியிருப்பான் (சங்கீதம் 1:1-3).
7. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஒற்றுமையோடு வாழ பிரயாசப்படுவான் (1 கொரி. 1:10). பொறாமை, வாக்குவாதம், பிரிவினை ஆகியவைகள் முதிர்ச்சியற்ற கிறிஸ்தவனின் அடையாளங்கள் (1 கொரி.3:1-3). ஆனால் அன்பு, ஐக்கியம், ஒற்றுமை முதிர்ச்சியின் அடையாளங்கள் (பிலி.2.1-4).
8. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் தன் நாவில் அடக்கம் உள்ளவனாயிருப்பான் (யாக்கோபு 3:2). வாயின் வார்த்தையில் கவனமாயிருப்பான் (யாக்கோபு 1:26). புறங்கூறுதல், மற்றவர்களைப் புண்படுத்துதல், குற்றஞ்சாட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடமாட்டான்.
9. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் உண்மையான. மாயமற்ற அன்பு காணப்படும் (கொலோ 3:14; ரோமர் 12:9,10; I யோவான் 2:5).
10. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எப்பொழுதும் தேவனையே சார்ந்து வாழப் பழகியிருப்பான் (யோவான் 15:5). ஜெபம் அவனுடைய வாழ்வின் மூச்சாக காணப்படும்.
11. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் கலாத்தியர் 5:22,23 வசனங்களில் கூறப்பட்ட ஆவியின் கனிகள் அனைத்தும் காணப்படும்.
12. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஆத்தும பாரம் உடையவனாயிருப்பான். ஆத்தும ஆதாயம் அவனுடைய இதய துடிப்பாக இருக்கும் (1 கொரி. 9:16; 2 கொரி. 5:14).



# ரூத்தின் சரித்திரம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**
All India National Director, Global University

யோசுவா முதல் எஸ்தர் வரை உள்ள பன்னிரண்டு புத்தகங்களும் சரித்திர ஆகமங்கள் என அழைக்கப்படுகின்றன. இன்னும் சரித்திரம் தரும் புத்தகங்கள் ஏராளம் இருப்பினும் **ரூத், எஸ்தர், யோபு** ஆகிய மூன்று புத்தகங்கள் மட்டுமே வேதாகமத்தில் தனிநபர் சரித்திர புத்தகங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. ரூத் என்னும் புறஜாதியப் பெண் ரூத் புத்தகத்தின் பிரதானக் கதாபாத்திரம், இவள் மோவாப் தேசத்துப்பெண், இன்றைய உலகில் மோவாப் என்பது ஜோர்டன் தேசம் என்று அழைக்கப்படுகிறது.

## ரூத் வாழ்ந்த தேசம்



இவளது சொந்த தேசம் புறஜாதிய தேசமாகிய மோவாப், மோவாபியர் யார்? லோத்துவுக்கும் அவனது மகளுக்கும் முறைகேடாய்ப் பிறந்த சந்ததியினர், விக்கிரக ஆராதனைக்காரர், கேமோஷ் அல்லது காமோக என்னும் தேவனை ஆராதித்தவர்கள் (எண்.21:29; 1இராஜா.3:26,27). விபச்சாரத்துக்கும், வேசித்தனத்துக்கும் தங்களை விற்றுப்போட்டவர்கள் (எண்.25). விருத்தசேதன உடன்படிக்கை இல்லாதவர்கள், தேவாலயம் இல்லை; தேவ ஆராதனையும் அங்கில்லை. மோவாபைப் பற்றி சிந்திக்கையில், மேலும் பல சரித்திர உண்மைகள் நம் நினைவிற்கு வருகின்றன.

இஸ்ரவேல் வாக்குத்தத்த தேசத்துக்குப் பயணம் செய்கையில் அவர்களைத் தங்கள் தேசத்தின் வழியாய் போக வழிவிடாமல் எதிர்த்து நின்றவர்கள் பிலேயாம் என்னும் தீர்க்கன் பாலாக் என்னும் மோவாபிய அரசனின் கைக்கூலியாய் வந்தும், இஸ்ரவேலரை சபிக்க முடியாமல் ஆசீர்வதித்தான் (எண். 22-24). எனினும், பிலேயாம் ஆலோசனைப்படி, மோவாபியப் பெண்கள் இஸ்ரவேலர் முகாமிட்டிருந்த பாளையத்துக்குள் வந்து, வேசித்தனம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி இஸ்ரவேலரை விக்கிரக ஆராதனை செய்யும்படி வழிவிலகச் செய்தனர். நியாயாதிபதிகள் காலத்தில் பதினெட்டு ஆண்டுகாலங்கள் இஸ்ரவேலர் மோவாபியரை சேவித்தார்கள். ஏகூத் என்னும் நியாயாதிபதியால் விடுவிக்கப்பட்டனர் (நியா.3).

எப்பிராத்தியராகிய எலிமேலேக்கும், அவன் மனைவி நகோமியும், அவர்கள் குமாரர் மக்லோன், கிலியோன் ஆகிய நால்வரும் பெத்லகேமில் பஞ்சம் வந்தபோது இஸ்ரவேல் தேசத்தை விட்டு இந்த மோவாபில் சென்று குடியேறினர்.

## ரூத் வந்த தேசம்

தனது சொந்த தேசமாகிய மோவாப் தேசத்துக்கு வந்து, பத்து வருடமாய் தங்கியிருந்துவிட்ட இஸ்ரவேலராகிய எலிமெலேக்கு நகோமி குடும்பத்தின் மூத்த குமாரனாகிய மக்லோன்-க்கு வாழ்க்கைப்பட்டாள் ரூத். ரூத்துக்கு உயர்குலத்தில் வாழ்க்கைப்பட்ட பெருமிதம்; ஆனால், நகோமியின் குடும்பத்துக்கோ, கீழ்நிலையில்

ஊறிவிட்ட அவமானம்! தான் திருமணமாகி புகுந்த வீட்டில் மாமனார், தனது புருஷன், அவனது தம்பி என மூன்று ஆண்மக்களின் மரணத்தைக் கண்ட ரூத், இளவயதில் விதவையாகிறாள்.

**நகோமியின் தீர்மானம் :** அச்சமயம் ரூத்தின் மாமியாரான நகோமி, கர்த்தர் தம்முடைய ஜனங்களை சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டு ''அப்பத்தின் வீடு'' எனப் பொருள் கொண்ட பெத்லகேமுக்கு திரும்புகிறாள். பெத்லகேமுக்குத் திரும்பி வந்த நகோமியின் தீர்மானம் அவசியமான ஒன்றாகும். தன் வீட்டில் இறந்துபோன ஆண்மக்கள், அவர்கள் உயிரோடிருந்த காலத்தில் எடுக்காத மிகப்பெரிய தீர்மானத்தை எடுத்த "இன்பமானவர்" என்று அர்த்தம் கொள்ளும் பெயருடைய நகோமி, தனது மாராவின் அனுபவத்தில் எடுக்க உறுதிக்கொண்டாள். இன்றும் இப்படி பெத்லெகேமுக்குத் திரும்பிவர வேண்டிய மாராவின் அனுபவத்தில் மோவாபில் வாசஞ்செய்யும் ஏராளம்பேர் உண்டே! திரும்பி வருதல் மெத்தவும் நன்றே!! அத்தியாவசிய ஆவிக்குரிய தேவையும் அதுவே!!!

**ரூத்தின் தீர்மானம் :** ஆனால் அதைவிட மேலான தீர்மானம் மோவாபியப் பெண்ணாகிய இளம் விதவை ரூத் எடுத்த தீர்மானம் முழு வேதாகமத்திலும் நாம் காணும் தீர்மானங்களில் மேன்மையானதாகும். தனது சகோதரி ஓர்பாளின் பாணியில் வீடு திரும்ப அவள் விரும்பவில்லை. தனது நாட்டு கலாச்சாரத்தின்படியும், நாட்டு நடப்பின்படியும், இன்னொரு திருமணம் செய்து தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. தான் பின்பற்றிய புறஜாதிய விக்கிரக வணக்கத்தையும், அதைச் சார்ந்த கலாச்சாரத்தையும் வெறுத்தாள். தனது தகப்பனையும், தாயையும், ஜென்ம தேசத்தையும் விட்டு, முன்னே அவள் அறியாத ஜனங்களிடத்தில் பெத்லகேமிற்கு தன் மாமியாருடன் வந்தாள் (ரூத்.1:16,17; 2:11).

ரூத் 1:16-17-ல் **அவளது அறிக்கையை கவனியுங்கள்** : ''நான் உம்மைப் பின்பற்றுவேன்; திரும்பிபோகமாட்டேன்; நீர் போகும் இடத்துக்கு வருவேன்; நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்; நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரிக்காது" -இது தனது மாமியார் மேல் கொண்டுள்ள அன்பு, "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" -இது உண்மையான ஜீவனுள்ள தேவன் மேலுள்ள அன்பு. விக்கிரகங்களை விட்டு முறைகேடானக் கலாச்சாரத்தை விட்டு யெகோவா தேவனைத் தொழுதுகொள்ளவும் பின்பற்றவும் அவள் செய்த தீர்மானம்.

**ஒரு சிக்கல்!** உபாகமம் 23:3-ன் படி "அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது'' என்பது இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம்.

**இதன் பொருள் என்ன?** காலா காலாத்துக்கும் மோவாபியர் விலக்கப்பட்டவர்களே; அவர்கள் தேவ ஜனமாகிய யூதருடைய சபையில் சேரத்தகுதியற்றவர்கள். ஆனாலும் நியாயப்பிரமாணத்துக்கு முன்பாக இரக்கம் மேன்மைப்பாராட்டும் (யாக்.2:13) என்பது எத்தனை உண்மை! நியாயப்பிரமாணமானது நம்மை தேவனுடைய குடும்பத்தினின்றும் ஒதுக்கித் தள்ளிற்று. ஆனால் கிறிஸ்துவின் மேலுள்ள நமது உண்மையான விசுவாசம் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக்குகிறது. ரூத்தும் அவ்வித கிருபையையும் இரக்கத்தையும் பெற்றதைக் காண்கிறோம். மத்தேயு ஒன்றாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் வம்ச அட்டவணைக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து பெண்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதில், தாமார், ராகாப். ரூத் மற்றும் பத்சேபாள் என்பவர்களின் பின்னணியங்கள் கேள்விக்குறியானதே! (ஆதி.38:3; யோசுவா 2:5; ரூத்.1:5; 2சாமு.11:6). மேசியாவை இவ்வுலகு ஈன்றளித்த தாய்மாராக இவர்கள் பட்டியலிடப்பட்டுள்ளார்களே! அது கிருபை! தேவனுடைய இரக்கமிகுந்த சர்வ

ஆளுகை என்றே கொள்ள வேண்டும். ஐந்தாவது பெண்ணாக இடம் பெற்றிருப்பவள் மரியாள். அதுவும் தேவக்கிருபையின் வெளிப்பாடே ஆகும் (லூக்.1:26-56).

## ரூத் வாழ்ந்த காலம்

அது இஸ்ரவேலில் நியாயாதிபதிகள் ஆண்டு வந்த காலம். அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான் (நியா.17:6;18:1;11:1;21:23). பிரிவினைவாதம், கொடூரம்,விசுவாசத் துரோகம், உள்நாட்டுப்போர்கள், தீவிரவாதங்கள், பயங்கரவாதங்கள் ஆகியவை திரளாயிருந்த இக்காலத்தில் சுற்றுமுள்ள புறஜாதியார் மத்தியில் இஸ்ரவேலர் நிந்தை நிறைந்த வாழ்க்கையில் உச்சகட்டத்திலிருந்தனர். ஆவிக்குரிய வாழ்வில் மிகத் தரம் தாழ்ந்துபோய்விட்டது. இன்று, நாம் வாழும் உலகமும் இந்நிலையில்தானே உள்ளது! அவிசுவாசமும், கீழ்படியாடிமையும், ஆண்டவருடைய ஆசீர்வாதமில்லாத தரித்திர நிலையுமே அக்கால இஸ்ரவேல் கடந்து சென்ற பாதை என்றால், இன்றைய நமது சூழலும் அதுதானே.

பரிகாரம் என்ன? "திரும்பி வருதலும், விட்டு வருதலுமே" பதிலாகும். இவ்வித அசாதாரமான சூழ்நிலையிலும் யெகோவா தேவனை நம்பிப் பின்பற்றி வாழும் ஒரு குடும்பத்துக்கு புயலின் நடுவில் அமைதியாய் வாழ இயலும் என்பதை இப்புத்தகம் நமக்குக் காட்டுகிறது.

## ரூத்துக்கு கிடைத்த மறுவாழ்வு

புறஜாதியப் பெண்ணாகிய ரூத் பெத்லெகேமுக்கு வந்தபோது மறுவாழ்வு கிடைத்தது. அப்பத்தின் வீட்டுக்கு வரும் அனைவருக்கும் அவ்வித உன்னத வாழ்வு நிச்சயம் உண்டு. வசனத்தின் வாழ்வும், வசனம் பிரசங்கிக்கப்படும் சபையின் வாழ்வும் எவரையும் உயர்த்திடுமே! ரூத்தின் மறுவாழ்வை ஏழு குறிப்புகளில் காணலாம்:

1. **தயவு** (ரூத் 2:2). மேவாபியப் பெண்ணிற்கு யூதரின் கண்களில் தயவு! இளவயதின் விதவைக்கு திருமணமாகாத செல்வந்தனாகிய போவாசின் கண்களில் தயவு!! தன்னைக் காண்கிற அந்நிய தேசத்தின் வேலையாட்கள் அனைவர் கண்களிலும் தயவு!!.
2. **வயலுக்குள் இறங்கும் ஆசீர்வாதம்** (2:7). வரப்பில் நின்றவள் வயலுக்குள் இறங்கும் கிருபை. மந்தைக்குப் புறம்பான நாம் மந்தையில் சேருகிற கிருபை.
3. **அரிக்கட்டுகள் நடுவே** (2:15) வயலில் இறங்கியவள் கட்டுகளின் நடுவே கதிர்பொறுக்க அநுக்கிரகம்! ஆசீர்வாத அரிக்கட்டுகளின் நடுவே நிறுத்தப்படுகிற அனுபவம்.
4. **அரிகளில் சிலதை சிந்தவிடும் கிருபை** (2:16). அள்ளிக்கொடுக்கும் ஆசீர்வாதம் ஆண்டவர் கரம் கொட்டித் தருகிறது.
5. **களத்துக்குப் போகிற ஆசீர்வாதம்** (3:6). தானியம் போரடிக்கும் களம் மகிழ்ச்சியின் களம். பாடுபட்டு பயிரிட்ட பலனைப் பெறும் களம். போவாசின் களத்திற்குச் சென்று அவன் பாதத்தண்டை காத்திருக்கும் வாழ்வு, கிறிஸ்துவும் நம்மிடம் இதைத்தானே எதிர்பார்க்கிறார்!
6. **தலையில் சுமக்கும் வாற்கோதுமை** (3:15). அரிகட்டுகளின் நடுவில் கதிர் பொறுக்கிய ரூத். இப்பொழுதோ ஊரார் அறிய தலையிலே ஆசீர்வாதத்தை சுமக்கிற மறுவாழ்வு, கிறிஸ்துவில் நமக்குக் கிடைக்கும் செழிப்பான வாழ்வு.

**7. போவாசுக்கு மனைவியாகுதலும், ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்தலும்** (4:13). அடிமையான ரூத்தை மீட்டுக்கொண்ட போவாஸ், அவளைத் திருமணம் செய்கிறான்.

## மீட்டுக்கொள்ளும் சுதந்திரவாளியின் தகுதி என்ன?

நெருங்கிய உறவினனாய் இருக்க வேண்டும் (லேவி. 25:25).
மீட்பின் கிரயத்தை செலுத்த இயலக்கூடியவராய் இருக்க வேண்டும்.
மீட்டுக்கொள்ள விருப்பமுடையவராய் இருக்க வேண்டும்.
அவன் விடுதலைப்பெற்ற சுயாதீனனாய் இருக்க வேண்டும்.

போவாஸ் மக்லோனின் சுதந்திரம் அனைத்தையும் மீட்டுக்கொள்ளத் தகுதியுள்ளவனாயிருந்ததுபோல, கிறிஸ்துவும் நம்மை மீட்டுக்கொள்ள முற்றிலும் தகுதியுள்ளவரே! (1பேதுரு 1:18-19; தீத்து 2:14) எத்தனை பாக்கியம் !

## ரூத் புஸ்தகம் தரும் ஆவிக்குரிய செய்திகள்

இந்த புஸ்தகம் அள்ளித்தரும் நடைமுறை ஆவிக்குரிய செய்திகள் ஏராளம். அவைகளில் சில....

- நகோமியையும், ரூத்தையும் பராமரித்து நடத்திய தேவனுடைய பராமரிப்பு இன்று நமக்குமுரியதே.

- தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை இப்புத்தகம் நமக்குத் தருகிறது. அந்நிய ஸ்திரீயான ரூத்தை கிரயம் செலுத்தி மீட்டு தேவ ஜனங்களுடன் போவாஸ் இணைத்தது போலவே கிறிஸ்துவும் புறஜாதியாரான நமக்காகக் கிரயம் செலுத்தி தேவனுடைய ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்கிறார்.

- ரூத் புத்தகத்தின் முதலாம் அதிகார சம்பவங்கள் மோவாப் தேசத்தில் நடக்கிறது. ரூத் போவாசைப் பற்றி அறியவில்லை. நாமும் உலகில் அந்நியராயிருந்தோம்.

- இரண்டாம் அதிகார சம்பவங்கள் பெத்லகேமில் ஒரு வயலில் நடக்கிறது. ஏழையாக கதிர்பொறுக்கும் ஒரு பெண்ணான ரூத் போவாசை செல்வந்தனாகவும், இரக்கமுள்ளவனாகவும் காண்கிறாள். நமது திக்கற்ற வாழ்க்கையில் இயேசுவும் இவ்விதமே நமக்குக் காட்சியளிக்கிறார்.

- மூன்றாம் அதிகாரம் பெத்லெகேமின் ஒரு களத்தில் நடக்கும் சம்பவங்கள். இங்கு போவாசின் பாதத்தில் பணிந்துகொள்ளும் ரூத், அவனது வாக்குத்தத்தங்களை நம்புகிறாள். கிறிஸ்துவுடன் உள்ள உறவில் நாம் வளரும்போது, அவரது பாத சரணாகதியே அவசியம்.

- நான்காம் அதிகாரம் பெத்லெகேமின் பட்டண வாசலில் நடக்கும் சம்பவங்கள், இங்கு ரூத் கதிர் கதிர்பொறுக்கும் ஏழைப் பெண்ணல்ல; போவாசுக்குச் சொந்தமானவள், அவனுக்குள்ளதெல்லாம் அவளுக்குக்குரியவையே! கிறிஸ்துவும் தம்மையே நமக்குத் தந்து தமக்குரியவைகளையும் நமக்குத் தந்திருக்கிறார்.

இந்த நான்கு அதிகாரங்களிலுள்ள சம்பவங்களும் ஒரு விசுவாசிக்குக் கிறிஸ்துவுடனுள்ள உறவினைச் சித்தரிப்பதாகக் காண்கிறோம்.

- ரூத்தின் அர்ப்பணமும் தீர்மானமுமே அத்தனைத் தொடர் ஆசீர்வாதங்களுக்கும் வழிவகுத்தன. நமக்கும் அவ்வித உறவின் வாழ்வு நமது இரட்சகருடன் என்றும் இருப்பதாக. பெத்லேகேமின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க மோவாபைவிட்டு வருவோமாக!

# இந்தியா செல்லும் பாதை

135 கோடி மக்கள் தொகையைக் கொண்ட உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக தேசம் நமது பாரத தேசம். வேற்றுமையில் ஒற்றுமை என்பது நமது தேசத்தின் மிகப்பெரிய வலிமையும், பெருமையுமாகும். ஜாதிகள் 3000, மொழிகள் 1600, பல பல மதங்கள், கலாச்சாரங்கள், உணவுபழக்கங்கள் ஊருக்கு ஒன்று என அனைத்து விதங்களிலும் பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவில் இந்தியர்கள் ஒற்றுமையுடன் இணைந்து வாழ்வது உலகிற்கே ஒரு மிகப்பெரிய ஆச்சரியமான உண்மையாக காணப்படுகிறது. ஆனால் இன்று, ஆறு அடிப்படை தனி மனித உரிமைகளுக்கும், அரசியல் அமைப்பு சட்டத்திற்கும், இந்திய இறையாண்மைக்கும் ஆபத்து ஏற்படுத்தும் வகையில், சர்வாதிகாரத்திற்கு நேராக தேசம் பயணிக்க தற்போதைய மத்திய. மாநில அரசுகளால் நிர்ப்பந்திக்கப்படுகிறது. தற்போது இந்தியா பயணிக்கும் பாதை மிகப்பெரிய ஆபத்துக்குரிய பாதையென அரசியல் ஆலோசகர்களும், சமூக நல ஆர்வலர்களும் எச்சரித்து வருகின்றனர். அப்படி தேசத்தை அச்சுறுத்தும் சர்வாதிகாரத்திற்கு தூண்களாக காணப்படும் ஏழு காரியங்களைக் குறித்து ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டு ஜெபிக்க வேண்டியது அவசியமாக காணப்படுகிறது.

### 1. ஒரே மதம்

உலகிலேயே அதிக மதங்களை உடைய இந்தியாவில் அனைத்து மதத்தினருக்கும் அரசியல் சாசன சட்டப்படி தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும், பிறருக்குச் சொல்லவும் உரிமை உள்ளது. ஆனால் தற்போது இந்தியர்கள் என்றால், இந்துக்கள் என்றும், ஏனைய மதத்தினருக்கு இந்தியாவில் இடம் இல்லை என்றும், இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரே மதம் தான் மிகவும் அவசியம் என்றும் தற்போது ஆளும் மத்திய அரசும், அதைச் சார்ந்துள்ள பல அமைப்புகளும் மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். தற்போது கங்கை நதி தெய்வம் எனவும், அதற்கு மனித அந்தஸ்தும் நீதிமன்றம் வழங்கியுள்ளது. அனைத்து அரசியல் தலைவர்களும், அரசியல் அதிகாரிகளும், சமய குருக்களும், சாதுக்களும், கார்ப்ரேட் நிறுவனங்களும், மதவாத இயக்கங்களும் இணைந்து தீவிரமாக உலகிலேயே புதியதோர் இந்து நாடாக இந்தியாவை 2021க்குள் உருவாக்க மிகவும் தீவிரமாக திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றனர்.

### 2. ஒரே மொழி

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, மொழியின் அடிப்படையில் பல மாநிலங்கள் உருவாகி தங்கள் மொழிகள் தேசிய மொழியாகவும், ஆனால் எந்த ஒரு தனி மொழியும் தேசிய மொழியாக உருவாக்க கூடாது என்றும் ஒருமித்த கருத்துடன் பல மாகாணங்கள் ஒன்றாக இணைந்து இந்தியா உருவானது. தற்போது இந்தியாவில் 41% ஹிந்தி மொழியும், 8.11% வங்காள மொழியும், 7.19% தெலுங்கு மொழியும், 6.99% மராட்டி மொழியும், 5.91% தமிழ் மொழியும் என தேசிய மொழிகளாக 22மொழிகளும், 1600க்கும் மேற்பட்ட மொழிகளும் பேசி வருகின்றனர். தேசத்தில் தற்போது ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக சட்டப்படி உருவாக்க வேண்டும் என தற்போதைய மத்திய அரசு மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருவதால் மீண்டும் ஒரு ஹிந்தி எதிர்ப்பு

போராட்டம் தென்மாநிலங்களான தமிழகத்திலும், கர்நாடகவிலும் உருவாகியுள்ளது. தேசத்தில் ஆங்கிலமும், ஹிந்தியும் அலுவலக பயன்பாட்டு மொழிகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஹிந்தியை தேசிய மொழியென சட்டத்திற்கு புறம்பான முறையில் பல அரசியல்வாதிகளும், வட இந்தியர்களும் கூறி வருகின்றனர். பல மொழி பேசும் இந்தியர்களை ஒரு மொழி பேசும் இந்தியர்களாக மாற்ற முயற்சிப்பது ஆபத்திற்குரிய பாதை.

### 3. ஒரே வரி

ஒரே தேசம் என உருவாக்கும் ஒற்றை சித்தாந்தங்களோடு பொருளாதார புரட்சி என 2017 ஜுலை 1ம் தேதி முதல் நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. என கூறப்படும் சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டுள்ளது. நமது பாரத பிரதமர் இரவு நேரத்தில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய இந்த ஜி.எஸ்.டி. வரி முறையை கடந்த காங்கிரஸ் அரசு அறிமுகப்படுத்த அனைத்து மாநில அரசுகளிடம் உதவியை நாடிய போது, குஜராத்தின் முதல்வராக இருந்த இன்றைய பிரதமர் அன்று ஜி.எஸ்.டி. வரியை நான் உயிரோடு இருக்கும் வரை அனுமதிக்க மாட்டேன் என்று எதிர்த்தவர் என்பது ஆச்சரியமான உண்மை.

தற்போது இந்த சரக்கு சேவை வரியால் பல பொருட்களின் விலை உயர்ந்து, பொதுமக்களிடையே மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் பட்டாசு தொழில், ஜவுளி தொழில் இந்நாளில் மிகப் பெரிய பாதிப்பை அடைந்துள்ளது. சாமானிய மக்களுக்கு எதிராகவும் , கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு சாதகமாகவும் இந்த வரி அமைந்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து கூறியுள்ளனர். தற்போது ஜி.எஸ்.டி. என்ற ஒரே வரி திட்டம் ஒரே தேசத்தை உருவாக்கும் திட்டத்திற்கு உருவாக்கப்பட்ட ஓர் தூண் என்பதில் சந்தேகமில்லை.

### 4. ஒரே உணவு

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையுள்ள 135 கோடி மக்களும் தங்கள் கலாச்சாரத்திற்கு ஏற்ப, தங்கள் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப பலவிதமான உணவு பழக்கவழக்கங்கள் உடையவர்களாக, இணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். தற்போது இந்தியா ஓர் இந்து தேசம் போலவும், இந்தியர்களின் உணவு சுத்த சைவம் போல் ஒரு மாய தோற்றத்தையும் மத்தியில் ஆளும் கட்சியும், மதவாத இயக்கங்களும் மக்களைப் பிரியப்படுத்த ஓர் ஆபத்தான பாதையை அமைக்கத் துவங்கியுள்ளனர். ஒரே உணவு என்ற தனி மனித உரிமையில் தலையிடும் மத வெறி, தற்போது இந்தியாவில் உருவாகியுள்ள ஒரு ஆபத்தான பாதை.

### 5. ஒரே கல்வி

ஒரே இந்தியாவை உருவாக்குவதற்காக மத்திய அரசு உருவாக்கியுள்ள ஒரே கல்வி எனும் கல்வி முறையானது, தமிழக மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் சேர நீட் தேர்விலிருந்து விலக்கு பெற சட்ட சபையில் மசோதா நிறைவேற்றியும், பிரதமர் மத்திய மந்திரிகளை சந்தித்து எவ்வித பயனும் இல்லாமல் நீட் தேர்வு தமிழகத்தில் நடைபெற்றது. இந்தியாவில் 799 பல்கலைக்கழகங்களும், 39,701 கல்லூரிகளும், 11,923 தனியார் கல்லூரிகள் உள்ளன. ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே சட்டம், ஒரே கல்வி என கூறி கிறிஸ்தவ

கல்வி நிறுவனங்களின் உரிமைகளை மறைமுகமாக தடுப்பது, கிராமப்புற மாணவர்களின் கல்விக்கு எதிராகவும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்களுக்குரிய இடஒதுக்கீட்டுக்கு எதிராகவும் தொடுக்கப்பட்ட மறைமுக திட்டம் என கல்வி ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## 6. ஒரே சட்டம்

இந்தியாவில் சுதந்திரம் பெற்ற பின் அனைத்து இந்தியர்கள் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை அறிந்து அனைவரும் அனைத்து துறைகளிலும் முழுமையான பலனை அடைய வேண்டும் என்பதற்காக இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய திரு. அம்பேத்கர் அவர்கள் சட்டத்தில் சிறுபான்மை யினருக்கும், தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களுக்கும் சில சலுகைகளை அனுமதித்துள்ளார். தற்போதைய மத்திய அரசு ஒரே இந்தியா, ஒரே சட்டம் என புதிய சட்டத்தை உருவாக்குவதில் மிகவும் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. ஒரே சட்டத்தால் சிறுபான்மையினரான கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் அவர்களின் மத நம்பிக்கைகளுக்கும் மிகப் பெரிய பாதிப்பும், பின்னடைவும் ஏற்படும். ஒரே சட்டம் தேசத்திற்கு மிகப் பெரிய நன்மையையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தும் என தேசமெங்கும் மதமாற்ற தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தி கிறிஸ்தவர்களின் உரிமைகளுக்கு மிகப் பெரிய தடையை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்ப டுகிறது.

## 7. ஒரே தேர்தல்

ஒரே தேர்தல் மூலம் அரசாங்கத்திற்கு தேர்தல் செலவுகள் குறைவு, கட்சிகளுக்கு தேர்தல் செலவுகள் குறைவு, தேர்தல் அலுவலகர்கள், பாதுகாவலர்களின் பணி எளிதாக்கப்படுதல், கருப்பு மற்றும் கள்ள பணங்கள் கட்டுப்படுத்தப்படுதல். மத்திய-மாநில அரசு ஒரே கட்சியாக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் நல்ல ஐக்கியம், ஒத்துழைப்பு கிடைத்தல் போன்ற சாதகமான, நன்மையான காரணங்களைக் காட்டினாலும், ஒரே கட்சி என்பதால் சர்வாதிகார ஆட்சி ஏற்பட வாய்ப்பு. 5 ஆண்டுகளுக்குள் ஆட்சி கலைக்க வாய்ப்பு,தேசிய-மாநில கட்சிகளுக்கிடையே சாதகமற்ற சூழ்நிலை ஏற்படுதல், சிறிய கட்சிகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் ஆபத்துகள் ஏற்படுத்துதல், கூட்டாட்சி-சுயாட்சி என்ற கொள்கைக்கு ஆபத்து ஏற்படுத்துதல் போன்ற மிகப் பெரிய பிரச்சனைகள் தேசத்தில் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

**அன்பானவர்களே! ஜனநாயக பாதையில் தேசம் பயணிக்க அச்சுறுத்தலாகவும், நெருக்கடியாகவும் இப்படி பல மாயத் தோற்றங்களைக் காட்டி, மக்களை ஏமாற்றி சர்வாதிகார ஆட்சிக்கு நேராக கொண்டு செல்லும் தலைவர்கள், இயக்கங்கள், அரசியல் சூழ்நிலைகள் ஆகியவைகளுக்காக மிகவும் பாரப்படுவோம். இந்தியா சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆகியும் மீண்டும் ஒரு அடிமைத்தனத்திற்குள்ளாக கடந்து செல்லும் விளிம்பில் நிற்கிறோம் என்பதை கருத்தில் கொண்டு தேசத்தின் ஜனங்களுக்காகவும், கிறிஸ்தவர்களுக்காகவும் தேவனிடம் மன்றாடுவோம். தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.**



நன்றி : கேரீத்

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

# தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்



## வயல்நிலங்களின் அறுவடை!

*- Rev. A. Edwin Prabahar*

...இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். யோவான் 4:35

அன்பான போதகபிதாக்கள், சபை விசுவாசிகளுக்கு, மிஷன் இயக்கத்தின் சார்பாக அன்பான வாழ்த்துக்கள் !

தமிழ்பிரதேச அசெம்பிளிஸ் ஆப் காட் மிஷன் ஊழியங்களின் மூலம் 1991ம் ஆண்டு முதல் 2018 வரை மிஷன் ஊழிய பாரம் நம்மை பற்றிப் பிடித்து, இன்று சுமார் 600 மிஷனரிகள் வட மாநிலங்களில் தாங்கும் நிலைக்கு தேவன் நம்மை ஆசீர்வதித்திருப்பதை எண்ணி கர்த்தரைத் துதிக்கிறேன். யோவான் 4:35ல் இயேசு கிறிஸ்து பகிர்ந்தளித்த பாரத்தை கவனியுங்கள். இதை உங்களுக்கு பகிர்ந்து கொள்ள தேவன் தந்த வாய்ப்புக்காக தேவனைத் துதிக்கிறேன்.

**இதோ வயல்நிலங்கள் !** (யோவான் 4:35)

இந்திய தேசம் அன்பரின் ஒரு வயல்நிலம். எத்தனை கோடி ஜனம்! எத்தனை பட்டணங்கள்! எத்தனை கிராமங்கள்! இவர்களுக்கு இயேசுவைக் கொடுக்கும் ஆத்தும தரிசனமும், பாரமும் ஒவ்வொரு ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் தேவை அல்லவா! மிஷனரி ஊழிய தரிசனமும், அதைக் குறித்த பாரமும் உங்கள் உள்ளங்களை நிறைப்பதாக. அதைக் குறித்து அனுதினமும் சிந்தியுங்கள். எல்லா ஜெபநேரங்களிலும் நினைவுகூர்ந்து ஜெபியுங்கள். அதில் உங்கள் பங்கு என்ன என்பதை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அதை உடனே இந்திய தேச வயல்நிலத்தில் நிறைவேற்றிட அர்ப்பணியுங்கள்.

வயல்வெளிகளில் மந்தைகளுடன் இராதங்கியிருந்த மேய்ப்பருக்குத் தான் "கிறிஸ்து பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்டது" (லூக்கா 2:8) அவர்கள்தான் அச்செய்தியை பரப்ப பயன்படுத்தப்பட்டனர். தேவனுடைய வயல் நிலங்களாகிய வடமாநில மிஷனரி ஊழிய களங்களைக் குறித்த தரிசனத்தையும், செயல்பாட்டையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்தளித்து, நம் மூலம், சபைகளின் மூலம் தேவனின் வயல்வெளி திட்டங்கள் நிறைவேறட்டும்.

**இப்பொழுதே அறுப்பு**! (யோவான் 4:35)

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே அன்பரின் வேத வார்த்தையைக் கவனியுங்கள். இப்பொழுதே அறுப்புக்கு வயல்நிலங்கள் விளைந்துவிட்டது என்றார். அறுவடை ஆயத்தமாயிருக்கிறது என்றார். லூக்கா 10:2-ல் அறுப்பு மிகுதி என்றார். அன்பரே, இனியும் தாமதம் வேண்டாம்!. லூக்கா 10:1-3-ன்படி பெரிய அறுவடைக்கு வேலையாட்களின் குறைவை உணர்ந்து வேலையாட்களாய் எழும்புவோம்! இலட்சக்கணக்கான கிராமங்களுக்கு இலட்சங்களென வேலையாட்களை நமது சபைகளில் இருந்து தேவன் எழுப்ப ஜெபிப்போம்! புறப்பட்டு போவோம்! அனுப்புவோம்! உதாரத்துவமாய் தாங்குவோம்!.

பவுல் அப்போஸ்தலன் ரோமர் 10:14,15-ல் அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்?

சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர் களின் பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று குறிப்பிடுகிறார். அறுவடையின் தேவையறிந்து வீறுகொண்டு எழும்பி, செயல்பட, பெரிய ஆத்தும அறுவடையை சுதந்தரித்திட தேவன் கிருபை செய்வாராக! வடமாநிலங்களை அறுவடையாளர்கள் நிரப்பட்டும்! சபைகள் எழும்பட்டும்! அறுவடை பெருகட்டும்!.

**இனிவரும் பலன் !** (யோவான் 4:36, 38; எபிரெயர் 11:26)

வயல்நில அறுவடையாளர்களுக்கு சந்தோஷம் உண்டாகத்தக்கதாக நித்திய வாழ்வில் கூலியாக தேவன் பலனைச் சேர்த்து வைக்கிறார். உலகத்தில் என்ன கிடைக்கும் என்ற சிந்தனையைவிட்டு, நாம் அனைவரும் நித்திய பலன் சேர்க்கப்பட நோக்கமாயிருந்து கிரியைச் செய்வோமாக! நித்திய ஜீவனும், நித்திய பலனும் பெற்றுக் கொள்ள தேவன் கிருபை செய்வாராக. கிரயம் செலுத்தி, வடமாநில ஊழியங்களுக்கு கொடுக்கவும், அனுப்பவும், உழைக்கவும் அர்ப்பணிப்போமாக! வயல்நில அறுவடையாளர்களே, நித்திய பலன் ஏராளம், தாராளம் பெறுவீர்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!.

போர் வீரரே! பூமி மாளுதே!
பாய்ந்து செல்லுவீர் நம் இயேசுவின் பின்னே!
தேவ ராஜ்யம் ஓங்கவே! பாவ மக்கள் மீளவே!
தியாக பரிசுத்தராய் சேவை செய்குவோம்!...

**மிஷன் கன்வென்ஷன்கள் :**

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு, பாண்டிச்சேரி, கோவை தெற்கு, மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மண்டலங்களில் மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றுள்ளது. நடைபெற்று முடிந்த மிஷன் கன்வென்ஷன்களில் அநேகர் உற்சாகமாய் கலந்து கொண்டார்கள். ஊக்கமாய் ஜெபித்தார்கள். உதாரத்துவமாய் மிஷன் பணிகளுக்கென்று கொடுத்தார்கள். மிஷனரிகளாய் செல்ல அர்ப்பணித்தார்கள்.

**பிராந்திய மிஷன் தலைவர்களின் கூடுகை :**

இந்த ஆண்டின் துவக்கத்திலேயே பிராந்திய தலைவர்களுடன் அந்தப் பிராந்தியத்திற்குட்பட்ட மண்டலத் தலைவர்களையும் மிஷன் இயக்க நிர்வாகக் குழுவினர் சந்தித்தனர். இக்கூடுகையில் இவ்வாண்டிற்கான மிஷன் திட்டங்களும், அதை நிறைவேற்றுவதற்கான செயல்முறைகளும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

**மிஷன் தலைவர்களின் ஒருங்கிணைந்த முகாம்:**

இந்த ஆண்டிற்கான மிஷன் தலைவர்களுக்கான முதல் ஒருங்கிணைந்த முதல் கூடுகை கடந்த ஜனவரி மாதம் 29, 30 ஆகிய தேதிகளில் மதுரையில் நமது A.G Campsite-ல் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இக்கூடுகையில் இலங்கை ஏ.ஜி சபைகளின் தலைவரும், தென் ஆசிய ஏ.ஜி மிஷன் இயக்குனருமான மைக்கேல் திசநாயகே அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு மிஷன் போதனைகளை வழங்கியது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

**ஜெப விண்ணப்பங்கள்**

- சபைகள் மிஷனரி தரிசன சபைகளாய் மாற.
- மிஷன் பிரயாணங்கள் மேற்கொள்ளும் நமது போதகர்கள், விசுவாசிகளின் ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பிற்காக.
- சபைகளிலும், மண்டலங்களிலும் மிஷன் கன்வென்ஷன்கள் நடைபெற, அவைகளின் ஆசீர்வாதத்திற்காக.
- ஜூன் மாதம் நடைபெறவுள்ள மிஷன் தலைவர்களுக்கான கூடுகையை கர்த்தர் ஆசீர்வதிக்க.
- சபைகளில் மிஷன் பணிகளுக்காக உற்சாகமாய் கொடுக்க, ஜெபிக்க, முழு நேர மிஷன் பணிகளுக்காய் மிஷனரிகள் எழும்ப.
- மிஷன் இயக்கத் தலைவர்கள், பிராந்திய மற்றும் மண்டலத் தலைவர்களுக்காகவும் ஜெபிக்கவும்.
- **இந்த மக்களினத்திற்காக ஜெபியுங்கள் :**



**மக்கள் இனம் :** நேய்,

**மொழி:** ஹிந்தி, தெலுங்கு, பெங்காலி,

**மக்கள் தொகை:** 1,12,45,000. **மதம் :** நேய் (இந்து)

**கிறிஸ்தவர்கள் :** 0.00%.

**நம்பிக்கை:** உள்ளூர் தெய்வங்களோடு அசுத்த ஆவிகளும் தங்களுக்கு துன்பங்களையும், வியாதிகளையும் தருவதாக நம்புகிறார்கள்.

**அதிகம் வாழும் பகுதி:** உத்தரப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம்.

**தத்தெடுத்துள்ள மண்டலம் :** சென்னை வடக்கு





மிஷன் கன்வென்ஷன் - கோவை தெற்கு





மிஷன் கன்வென்ஷன் - திருச்சி

மிஷன் கன்வென்ஷன் - மதுரை வடக்கு, தெற்கு






மிஷன் பிரயாணம் - மத்திய பிரதேசம்  மிஷன் தலைவர்களின் ஒருங்கிணைந்த முகாம்

## The ABC of Godliness

Acknowledge Him. Be kind. Call to God. Do good.
Encourage one another. Forgive. Give generously.
Humble yourselves. Invite the poor. Judge not.
Keep your self pure. Love your neighbour.
Mind your own business. Never forget His precepts. Obey God.
Pray continually.  Quench not the Spirit. Rejoice.
Sing praises. Trust Him. Understand the Lord's will.
Visit the fatherless. Walk humbly with God.
EXamine your ways. Yield to Him. Zip your mouth.

A–Proverbs 3:6; B–Ephesians 4:32; C–Psalm 55:16; D–Luke 6:27; E–Hebrews 3:28; F–Ephesians 4:32; G–Romans 12:8; H–1 Peter 5:6; I–Luke 14:13; J–Matthew 7:1; K–1 Timothy 5:22; L–Matthew 19:19; M–1 Thessalonians 4:11; N–Psalm 119:93; O–Acts 5:29; P–1 Thessalonians 5:17; Q–Hebrews 11:34; R–Psalm 118:24; S–Psalm 47:6; T–Psalm 3:5; U–Ephesians 5:17; V–James 1:27; W–Micah 6:8; X–Lamentations 3:40; Y–Romans 6:13; Z–Psalm 39:1

## கம்ப்யூட்டர் தேவை

நமது **பரிபூரண ஜீவன் பத்திரிக்கை**
ஊழியத்திற்கு அவசரமாக ஒரு
Desktop கம்ப்யூட்டர் தேவைப்படுகிறது.
இதற்காக ஜெபித்துக்கொள்ளவும்.
கொடுக்க ஏவப்படுகிறவர்கள்
எங்களை தொடர்பு கொள்ளவும்.



**Cell: 87789 08759, 96003 28821**



# நல் ஆலோசனையை நாடுங்கள்

Rev. I. அலெக்ஸாண்டர்
விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும், நல்யோசனை செய்து யுத்தம் பண்ணு (நீதி.20:18) என்றும், "நல்யோசனை உன்னைக் காப்பாற்றும். புத்தி உன்னைப் பாதுகாக்கும்" (நீதி.2:11) என்றும் சத்திய வேதம் நமக்கு மிகவும் தெளிவாகப் போதிக்கிறது. வேதத்தில் தேவ மனிதர்களின் வாழ்க்கையில் தேவன் அவர்களுக்கு ஆலோசனை சொன்னதுண்டு. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன் (சங்.16:7). ஆலோசனை சொல்வதற்குப் பயன்படுத்தின பாத்திரங்களுண்டு. மோசேக்கு அவனுடைய மாமனாகிய எத்திரோ.... இப்பொழுது என் சொல்லைக் கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன். தேவனும் உம்மோடுகூட இருப்பார்.... என்று ஆலோசனை கொடுத்தான் (யாத். 18:19-23). ஆலோசனையின் முடிவைப் பாருங்கள். இந்த ஜனங்கள் எல்லாருக்கும் தாங்கள் போகும் இடத்திற்குச் சுகமாய்ப் போய் சேரலாம் என்றான். மோசே தன் மாமன் சொல்லைக் கேட்டு, அவன் சொன்னபடியெல்லாம் செய்தான்.

அப்போஸ்தலர் 13:22-ல் ''ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்" என்று வாசிக்கிறோம். அகித்தோப்பேல் தாவீதுக்கு ஆலோசனைக்காரனாயிருந்தான். "......அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல் இருந்தது. அப்படி அகித்தோப்பேல் அப்சலோமுடன் சேர்ந்து தாவீதுக்கு விரோதமாக ஆலோசனை வழங்கினபோது கர்த்தர் ஊசாய் என்பவனை எழுப்பி அகித்தோப்பேலின் ஆலோசனையை அவமாக்கித் தாவீதைத் தப்புவித்தார்".

அப்போஸ்தலர் 6:5-ல் இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது என்று வாசிக்கிறோம். என்ன யோசனை? "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியில்ல" (அப்.6:2-4). நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். அந்த யோசனையினால் "தேவ வசனம் விருத்தியடைந்தது. சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்படிந்தார்கள் (அப்.6:7). ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் என்றும் ஆலோசனைகாரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்'' (நீதி.11:14;24:6) என்றும் வாசிக்கிறோம். துன்மார்க்கனுடைய ஆலோசனையில் நடக்க வேண்டாம். ஆனால் மெய் ஞானத்தையும், நல் ஆலோசனையையும் காத்துக்கொள்வோம் (நீதி.3:21).

இன்று அநேகர் மாம்சமும், மனசும் விரும்புகிறபடி நடந்து எந்த ஆலோசனையையும் கேட்பதில்லை. எவருடைய புத்திமதியையும் கேட்பதில்லை. நீதி.13:18-ல் புத்திமதிகளைத் தள்ளுகிறவன் தரித்திரத்தையும் இலட்சையையும் அடைவான்; கடிந்து கொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான் என்று எழுதப்பட்டிருக்கிறது. சங்.141:5-ல் நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி,

என்னைக் கடிந்து கொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும். என் தலை அதை அல்லத் தட்டுவதில்லை; என்று தாவீதின் சங்கீதத்தில் கூறுகிறார்.

இன்று ஆலோசனையை அசட்டை பண்ணுகிறவர்கள் ஒருநாள் ஐயோ, போதகத்தை வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணியதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியை சாயாமலும் போனேனே! என்று முறையிடும் நாள் வரும் (நீதி.5:12,13). இஸ்ரவேலுக்கு தலைவனாய் இருந்து ஜனங்களை வழிநடத்தின மோசேக்கும், சிங்காசனத்தில் ராஜாவாக இருந்து ஜனங்களை நியாயம் விசாரித்த தாவீது ராஜாவுக்கும் ஆலோசனை தேவைப்பட்டதென்றால், நமக்கும் தேவ மனிதர்கள் மூலம் ஆலோசனை எவ்வளவு அவசியமாயிருக்கிறது. நீதி.12:15-ல் ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் என்று ஞானி கூறுகிறார். முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்ட ரெகோபெயாமைப் போல் இராமல் தேவ ஆலோசனையை நாடுவோம். முதிர்ந்த தேவமனிதர்கள். தேவ ஊழியர்களின் ஆலோசனையைப் பெற்று, நாம் அனேகருக்கு ஆசீர்வாதமாகயிருக்க நாடுவோம். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1தெச.5:21,22,23).

---


தேவனுக்கே மகிமை

தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்

வழங்கும்




TV நிகழ்ச்சி

பாருங்கள்! பயனடையுங்கள் !!

தமிழன்

தொலைக்காட்சியில்

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

தேவ செய்தி அளிப்பவர்கள்

Rev.P.S. ராஜமணி, Rev.D.மோகன், Rev.A.ஆபிரகாம் தாமஸ்

பிரதேச தலைவர்கள் மற்றும் மண்டல தலைமை போதகர்கள்

**Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting**
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009

# SFC மாணவர் சீஷத்துவ முகாம் நடைபெறும் மண்டலங்கள் மற்றும் நாட்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விருதுநகர் | ஏப்ரல் 1 | திருவாரூர் | ஏப்ரல் 27 - 28 | ஒசூர் | மே 15-17 |
| அம்பை | ஏப்ரல் 23, 24 | புளியங்குடி | ஏப்ரல் 28 | கடலூர் | மே 15-17 |
| தஞ்சாவூர் தெற்கு | ஏப்ரல் 23,24 | தஞ்சாவூர் வடக்கு | ஏப்ரல் 30 | தேனி | மே 16,17 |
| கோவை வடக்கு | ஏப்ரல் 23,24 | சென்னை தெற்கு | மே 2 - 4 | மதுரை தெற்கு | மே 16-18 |
| திருச்சி | ஏப்ரல் 23 -25 | (ஆங்கிலம், தமிழ்) | | கோவில்பட்டி | மே 17, 18 |
| வில்லிவாக்கம் | ஏப்ரல் 23 -25 | சீர்காழி | மே 2 - 4 | திண்டுக்கல் | மே 21-23 |
| சதர்ன் டிஸ்ட்ரிக்ட் | ஏப்ரல் 23 -25 | சத்தியமங்கலம் | மே 7- 9 | நாசரேத் | மே 21-23 |
| செங்கல்பட்டு | ஏப்ரல் 24,25 | பாண்டிச்சேரி | மே 7 - 9 | சாத்தூர் | மே 21-23 |
| ராமநாதபுரம் | ஏப்ரல் 24,25 | ஈரோடு | மே 8 - 9 | நாகர்கோவில் | மே 21-23 |
| மதுரை வடக்கு | ஏப்ரல் 24 - 26 | நீலகிரி | மே 8-10 | தாம்பரம் மேற்கு | மே 22 - 24 |
| புதுக்கோட்டை | ஏப்ரல் 25 - 26 | கிருஷ்ணகிரி | மே 8-10 | செங்கோட்டை | மே 22 - 23 |
| செங்கல்பட்டு | ஏப்ரல் 25 - 27 | திருநெல்வேலி | மே 14,15 | ஒட்டப்பிடாரம் | மே 23 - 24 |
| மதுராந்தகம் | ஏப்ரல் 26, 27 | காஞ்சிபுரம் | மே 14-16 | சிவகங்கை | மே 28 - 29 |
| தர்மபுரி | ஏப்ரல் 26, 27 | பெரம்பலூர், | | தூத்துக்குடி | மே 28 - 29 |
| விழுப்புரம், | | அரியலூர் | மே 15,16 | பாளையங்கோட்டை | மே 28 - 29 |
| உளுந்தூர்பேட்டை | ஏப்ரல் 26, 27 | திருப்பூர் | மே 15,16 | கோவை தெற்கு | மே 28-30 |
| அம்பத்தூர் | ஏப்ரல் 26 - 28 | ராதாபுரம் | மே 15,16 | வேலூர் | மே 28-30 |
| நாமக்கல் | ஏப்ரல் 27 - 28 | சென்னை வடக்கு | மே 15-17 | திருவள்ளூர் | மே 29 |
| தாம்பரம் கிழக்கு | ஏப்ரல் 26 - 28 | சேலம் | மே 15-17 | தாம்பரம் மத்தியம் | மே 29-31 |

# வெயிலைச் சமாளிப்பது எப்படி?

## HOW TO BEAT THE HEAT?



இந்த ஆண்டில் கோடைக் காலம் தொடங்கியதை அடுத்து தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் வெயில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. கோடை வெப்பத்தால் சென்ற ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இப்போதே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தால், உயிரிழப்புகளைப் பெருமளவு தடுக்க முடியு ம். கொளுத்தும் கோடை வெயிலைச் சமாளிக்க எளிய வழிகள் உண்டு.

**வெப்பத்தைத் தணிக்க:**

கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். ஐஸ் தண்ணீரை விட, மண் பானைத் தண்ணீர் நல்லது. எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சர்க்கரை அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், கிரீம் மிகுந்த பேக்கரி பண்டங்கள், பர்கர், பீட்ஸா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது. அதே போல், சூடான, காரமான, மசாலா கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர் சாதம், கம்பங்கூழ், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கேரட், பீட்ருட், பீர்க்கங்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடலை, அவரை, முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெங்காயப் பச்சடி, தக்காளிக்கூட்டு முதலியவை சிறந்த கோடை உணவுகள். மாலை வேளைகளில் வெள்ளரி சாலட், தர்பூசணி சூப், தக்காளி சூப் வகைகளைச் சாப்பிடலாம். திராட்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, மாதுளை, முலாம் பழம், ஆப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் அருந்தலாம். நுங்கு, கிர்ணி, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும்.

காபி, தேநீர் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதைக் குறைத்துக் கொண்டு, இளநீர், நீர்மோர், நன்னாரி சர்பத், பானகம், பதநீர் முதலியவற்றை அதிகமாகக் குடிக்கலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்ப நிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

**வெயிலைச் சமாளிக்க :**

கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. பகலில் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக் கொள்ள வேண்டும் அல்லது குடை கொண்டு செல்ல வேண்டும். கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்து கொள்ளலாம். சருமத்தில் ‘சன் ஸ்கிரீன் லோஷ’னைப் பூசிக்கொள்ளலாம். கைவசம் சுத்தமான தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம். காற்றோட்டமான கதர், பருத்தி ஆடைகள் கோடைக் காலத்துக்கு ஏற்றவை. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம். ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வரும் வெயில் ஒரு சவால் தான். ஆனால், அதில் இருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்துகொண்டால், அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். நம் ஆரோக்கியம் நம் கையில்!

– பொதுநல மருத்துவர்



# எதிர்ப்பு நிறைந்த இந்நாட்களிலும் தடையின்றி அறிவிப்பது எப்படி?


**Rev. J. தேவதாசன் கலையரசன்**
மண்டலத் தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்


**சுவிசேஷ ஊழியம் பாகம் - 3**

சுவிசேஷ ஊழியத்திற்கு எதிர்ப்புகள், தடைகள் என்பது புதிதல்ல, இன்னும் சொல்வதென்றால், சுவிசேஷ ஊழியம் என்பதே எதிர்ப்பில் பிறந்து வளர்ந்ததுதான். ஏனென்றால் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி அன்றைய உலகத்தின் மதநம்பிக்கையின் அஸ்திபாரங்களை அசைத்தது. பாமரமக்களாக காட்சியளித்த அப்போஸ்தலர்கள் எழும்பி நின்று சுவிசேஷ செய்தியை, கிறிஸ்துவை மையப்படுத்திய செய்தியை பிரசங்கித்தபோது 3000, 5000 என்று மக்கள் கூட்டம் கூட்டமாக மனந்திரும்பினார்கள். எருசலேமில் மிக குறுகிய காலத்தில் 40,000 விசுவாசிகள் எழும்பினார்கள் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். அந்நாட்களில், உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள் என்று பேசுமளவு, சுவிசேஷ ஊழியத்தின் தாக்கம் அதிகரித்தது. அரசாங்கமும், சுற்றியிருந்தவர்களும் பயந்தபடியால் அப்போஸ்தல நடபடிகளில், நான்காம் அதிகாரத்தில் எதிர்ப்பு உருவானதையும், இயேசுவின் நாமத்தை பிரசங்கிக்கக்கூடாது என்று பயமுறுத்தப்பட்டதையும் பார்க்கிறோம். அப்போஸ்தலர்கள், ஊழியர்கள் என்ற நிலையிருந்த சுவிசேஷ ஊழியம் விசுவாசிகளின் இயக்கமாக மாறியது. எப்படியென்றால் 4-ம் அதிகாரத்தில் விசுவாசிகள் கூடி ஜெபித்தார்கள். பூரண கிருபை பெற்றார்கள். அப். 8:1-4-ன் படி விசுவாசிகளே எங்கும் சிதறினார்கள், சுற்றித்திரிந்தார்கள். அந்தச் சூழ்நிலையில் அவர்கள் பயந்து ஒளிந்து கொள்ளாமல், எங்கும் திரிந்து சுவிசேஷம் அறிவித்தார்கள். ஆம் ஆதிச்சபையை எதிர்ப்புகள் முடக்கி போடவில்லை மாறாக வீறுகொண்டு எழும்பச் செய்தது. எனவே சுவிசேஷம் சொல்வதற்கு ஏற்படும் தடைகள் எதிர்ப்புகளைக் காரணமாகச் சொல்லி, நற்செய்தி ஊழியத்தை சபையிலிருந்து நீக்கிவிடக்கூடாது. அல்லது பின்பு செய்யலாம் என ஒத்திவைத்து விடக்கூடாது. மாறாக எதிர்ப்புகளின் மத்தியில் ஆதிச்சபை செய்தது போல நாமும் தீவிரமாக செயல்பட வேண்டும். எதிர்ப்புகளின் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க சிறந்த முறைகளை இக்கட்டுரையில் தியானிப்போம்.

## I. அறிமுகமானவருக்கு அறிவிக்கும்போது எதிர்ப்புகள் குறையும்

1. முதல்முதலாக பயமுறுத்தல், சுவிசேஷத்திற்கு எதிராக எழுந்தபோது ஆதிசபையின் விசுவாசிகள் ஒன்றுபட்டார்கள், ஜெபித்தார்கள், துணிவுடன் அறிவித்தார்கள் (அப்.24:31;8:1-4). அவர்கள் அறிவித்தவிதம், இன்றைய நாட்களுக்கும் படிப்பினைக்குரியது. சுற்றித்திரிந்து அவர்கள், பார்ப்போருக்கெல்லாம் சொல்லிவிடாமல். தங்கள் சொந்த இனமான யூதர்களுக்கே அறிவித்தார்கள் (அப்.11:19). இதை ஏதோ ஒரு இன உணர்வினால் செய்த செயலாக கருத தேவையில்லை யூதர்களின் வழியாக சுவிசேஷம் உலகுக்குச் செல்லும் தேவதிட்டத்தின் நிறைவேறுதலாகவும் அதைப் பார்க்கக்கூடாது.

2. சுவிசேஷ ஊழியப் பயற்சிக்கால அறிவித்தலில், அறிமுகமானவருக்கு சொல்ல ஆரம்பிப்பது ஒரு சிறந்த பயிற்சி, ஏற்கெனவே அறிமுகமானவருக்கு அதாவது

தங்கள் சொந்த குடும்பத்தார், உறவினருக்கு, நண்பருக்கு என்று ஆரம்பிப்பது எளிதானது, எதிர்ப்பற்றது. ஆகவேதான் இயேசுகிறிஸ்து நமது சீஷர்களுக்கு.... (மத்.10:5,6) இஸ்ரவேலருக்கு, முன்னுரிமை கொடுக்கச் செய்தார்.

3. பவுலின் முதல் மிஷனரிப் பிரயாணம், பர்னபாஸின் சொந்த ஊரான சீப்பருதீவு என்று இருப்பதைப் பாருங்கள் (அப்.4:36). இதனடிப்படையில் அறிமுகமானவருக்கு சுவிசேஷம் அறிவிக்கும்போது, சொல்லும் திறன்மேம்படுவதுடன் எதிர்ப்பே இல்லாமல் செய்யலாம்.

4. அறிமுகமற்றவர்களிடம் அறிவிக்கக்கூடாதா? தாராளமாக அறிவிக்கலாம். ஆனால் எல்லோரிடமும் அல்ல, ஏற்றுக்கொள்வோரிடம் அறிவித்தாலே போதுமானது. முன்பு போலல்லாமல், கிராம ஊழியங்கள், தெருப்பிரசங்கள், கைப்பிரதிதாள் விநியோகித்தல் எதிர்ப்பை சந்திப்பது ஏன்? முதலாவது அறியாதவர்களுக்குச் சொல்கிறோம். இரண்டாவது நம்மை ஏற்றுக் கொள்ளாதவர்களிடம் சுவிசேஷத்தை திணிக்கிறோம். ஆகவே தான் அறிமுகமானவருக்கு சுவிசேஷம் அறிப்பதை இந்நாளில் ஊக்குவிக்க வேண்டும் (oikos).

## II. ஏற்றுக்கொள்வோருக்கே சுவிசேஷம் அறிவித்தால் எதிர்ப்புகள் வராது

நேரம் கிடைக்கும் போதெல்லாம் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிர்படுவோருக்கு சுவிசேஷம் அறிவிப்பது தவறல்ல (அப். 17:17). ஆனால் அவர்கள் உங்களை ஏற்றுக்கொண்ட பிறகே, நீங்கள் சொல்லும் சத்தியத்திற்கு செவி கொடுப்பார்கள். உங்களிடம் சில நிமிடம் பேசலாமா? என்று உங்கள் அழைப்பை, ஏற்றுக்கொள்வோரிடம் சுவிசேஷத்தைச் சொல்லிப்பாருங்கள், விரும்பினால் தொடர்ந்து பேச அனுமதிப்பார்கள். அல்லது தற்போது வேண்டாம் என்று சாதாரணமாக சொல்லி பிரச்சனையின்றி அனுப்பி விடுவார்கள். மாறாக கட்டாயப்படுத்துவது போல வீடு வீடாக சென்று அனைத்து வீடுகளிலும் பேசும்போது அநேகருக்கு எரிச்சல் உண்டாகிறது. எதிர்க்கிறார்கள். சமாதானப் பாத்திரருக்கு அறிவியுங்கள் (லூக்.10:5). ஏற்றக்கொள்ளாதவரை விட்டுவிலகுங்கள். ஆனால் என்றுமே அவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்று நினைத்துவிட வேண்டாம். அவர்களுக்கும் பின்னாளில் வேறு ஒருவர் மூலம் தேவராஜ்ஜிய செய்தி வரும் என்று சொல்லி அவர்களை விட்டு விலக வேண்டும் (லூக்கா 10:10,11).

## III. நேர்மறை அணுகுமுறையாளர்களுக்கு எதிர்ப்புக் குறையும்

ஒரு வீட்டிற்குள் நுழைந்தவுடன் சமாதானம் என்று வார்த்தை சாதகமான, நம்பிக்கையூட்டும் வார்த்தையை முதலாவது அறிவித்தால் எதிர்ப்பேது? (லூக்கா 10:5). நம்மவர்களில் சிலர் மதியீனமாக பிறருடைய நம்பிக்கைகளை இழித்துப் பழித்துப்பேசுவது, விமர்சிப்பது, சாபமிடுவது, பிசாசு பில்லி சூனியம் என்று பயமுறுத்துவது இதை முதலாவது செய்வதால் தேவையற்ற எதிர்ப்புகளை சந்திக்கிறார்கள்.

## IV.வரங்களைப் பயன்படுத்தி சுவிசேஷம் அறிவிப்போருக்கு, மக்களும் ஆதரவு தருவார்கள்

தனியாள் சுவிசேஷ ஊழியம் என்றாலே, வெறுமனே கைப்பிரதி தாள் விநியோகிப்பது, சம்பாஷிப்பது, பிரசங்கிப்பது என்று இருப்பதால், மதபேதமுள்ளவர்கள் எதிர்க்கிறார்கள். அதேசமயம் பேசும் வார்த்தைகள் உறுதிப்படுத்தும் வரங்களுடன், பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் சுவிசேஷம் அறிவிக்கப்படுமானால், நாம் அவர்களுக்குப் பயப்படும் நிலைமாறி அவர்கள் நமக்குப் பயப்படும் நிலைவரும் (அப்.16:20; 1தெச.1:5. அப்.5:13; அப்.4:30).

### V. வாழ்க்கைமுறை சுவிசேஷம்

சுவிசேஷ ஊழியத்தை ஒரு நிகழ்ச்சி நிரலாகவே பார்த்து பழகிவிட்டோம். உங்கள் சபையில் சுவிசேஷ ஊழியம் இருக்கிறதா என்று கேட்டால் ஆம் மூன்றாவது சனிக்கிழமை இருக்கிறது என்கிறோம். அந்த ஒரு நாளில் செய்வது மட்டுமே சுவிசேஷ ஊழியம் என்று கருதுவதால் விசுவாசிகள் இதர நாட்களில் தங்கள் அன்றாட வாழ்வில், சுவிசேஷ ஊழியத்தை செய்ய தவறிவிடுகிறார்கள். இரும்புத்திரை நாடுகளில் இன்றும் சுவிசேஷம் வளர்வதற்கு ஒரு காரணம். கூட்டமாக வீதியில் செல்லாமல், தெருபிரசங்கம் செய்யாமல் தங்கள் வாழ்க்கையின் அனுதின அனுபவமாக மாற்றிவிட்டார்கள். சாட்சி சொல்வது மட்டுமல்ல, சாட்சியாக வாழ்ந்து (அப்.1:8; ஏசாயா 8:18). அன்றாட வாழ்வில் தனது தொடர்பிலுள்ள மக்களுக்கு சுவிசேஷம் சொல்வதே வாழ்க்கை முறை சுவிசேஷம். எந்த உபகரணம் இன்றி தாங்களே உபகரணமாக மாறி சுவிசேஷம் அறிவிப்பவர்கள். சப்தமில்லாமல் பெரும்மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்த இயலாத சுவிசேஷ ஊழியத்தை எதிர்ப்பு காலங்களிலும் தீவிரமாக செய்ய முன்வருவோமாக!

---

**30 DAYS OF PRAYER**
**FOR THE MUSLIM WORLD**

**மே 15- ஜுன் 14, 2018**

**நமது தேசத்திலுள்ள இஸ்லாமிய நண்பர்களின் இரட்சிப்பு மற்றும் ஆசீர்வாதத்திற்காக 30 நாட்கள் பாரத்தோடு ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

### மண்டலத் தலைமைப் போதகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

உங்கள் மண்டலங்களில் மண்டல அளவில் நடக்கும் நிகழ்ச்சிகளின் புகைப்படங்களை எங்களுக்கு அனுப்பித் தாருங்கள். நம்முடைய பத்திரிக்கையில் தேர்ந்தெடுத்து பிரசுரிக்க வசதியாக இருக்கும். நன்றி.

**மின்னஞ்சல் (E-Mail) மூலமாக பரிபூரண ஜீவன் பத்திரிக்கை படிக்க விரும்புவோர் எங்களது Mail ID-யில் தொடர்பு கொள்ளவும்**

**ag.paripooranajeevan@gmail.com**

# திருமதி. குணசாலி

நீதிமொழிகள் 31: 10 - 31

## குணசாலியான பெண்

| | |
|---|---|
| காரியசித்தியுடையவள் | : "தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள் (வச.13, 15, 19)" |
| விவேகமானவள் | : "...விசாரித்து வாங்குகிறாள்" (வச.16, 22, 24) |
| உத்தமி (அடக்கமாய் உடுத்திக் கொள்வாள்) | "அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது" (வச.25) |

## புரிந்துகொள்ளும் மனைவி

| | |
|---|---|
| கணவனின் நலனை நாடுபவள் | : "அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்"(வச. 12) |
| கணவனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் | : "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்" (வச.16, 22, 24) |
| கணவனின் உயர்வுக்கு ஒத்துழைப்பவள் | : "அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" (வச. 22, 24) |

## அரவணைக்கும் தாய்

| | |
|---|---|
| ஞானமாய் குடும்பத்தை உடுத்துவிப்பாள் | : "தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்புகளை உடுத்துவிக்கிறாள்"(வச. 21) |
| நன்றாக உணவளிப்பாள் | : "இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுக்கிறாள் " (வச. 15, 27) |
| சரியாகத் திட்டமிடுவாள் | : "தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள்" (வச. 14,18) |

## அன்பு காட்டும் அயலகத்தாள்

| | |
|---|---|
| ஏழைக்கு இரங்குபவள் | : "ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்" (வச. 20) |
| தேவையுள்ளோரை ஆதரிப்பவள் | : "சிறுமையானவர்களுக்குத் தன் கைகளைத் திறப்பாள்" (வச. 20) |
| ஆறுதலான வார்த்தை களைப் பேசுபவள் | : 'தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" (வச. 26) |

| | |
|---|---|
| அவளது மதிப்பு | : "அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" |
| அவளது பாராட்டு | : "அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி" என்கிறார்கள் |
| அவளது மேன்மை | : "நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள்" |
| அவளது இரகசியம் | : "கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்" |

**நீங்கள் எப்படி? சோதித்துப் பாருங்கள்!**

# தேவ பக்தியோடு பிள்ளைகளை வளர்ப்பது எப்படி?



அன்பான பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க சில ஆலோசனைகளை ABC என்ற வரிசையில் கீழே காண்போம்.

A is for Accountability. பிள்ளைகள் தங்கள் நடத்தையை குறித்து உங்களிடம் உத்தரவாதத்துவம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (மத். 12 : 36).

B is for Boundaries. பிள்ளைகளுக்கு திட்டமான எல்லைகளை ஏற்படுத்த வேண்டும். எல்லைகளை மீறும்போது ஏற்படும் விளைவுகளையும் தண்டனையையும் தெளிவுப்படுத்த வேண்டும்.

C is for Consistency. பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் கொள்கையிலும், செயல்பாட்டிலும் மாற்றம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும் (ரோமர் 2:22).

D is for Discipline. குற்றத்திற்கு ஏற்ற தண்டனை கொடுக்க வேண்டும். ஆனால் கோபத்தில் அவர்களை சிட்சிக்கக் கூடாது (நீதி. 13 : 24).

E is for Example. பிள்ளைகளுக்கு பெற்றோர் நல்ல மாதிரிகளாக இருக்க வேண்டியது அவசியம். வேத வாசிப்பு, ஜெபம் போன்றவற்றிக்கு மாதிரியாக இருந்து பிள்ளைகளை பழக்க வேண்டும் (யோவான் 13 : 15).

F is for Forgiveness. மன்னிப்பு. முதலாவது நாம் அதை அப்பியாசிக்க வேண்டும். மன்னிப்பின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும் (மத்தேயு 6 : 14).

G is for Giving. கொடுப்பதினால் உள்ள மகிழ்ச்சியை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும் கொடுப்பது மட்டுமல்லாமல் தேவையுள்ளவர்களுக்கும் கொடுக்கவேண்டும் (லூக்கா 6 : 38)

H is for Humor. உங்கள் பிள்ளைகளுடன் மனம் விட்டு சிரித்து மகிழுங்கள் (நீதிமொழிகள் 15 : 13).

I is for Imagination. கற்பனை சக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளோடு விளையாடுங்கள். அவர்களோடு கூட பாடுங்கள், வாசியுங்கள் (எபே. 5 : 19)

J is for Justice. நேர்மையாக, நியாயமாக காரியங்களை நடப்பியுங்கள். உங்கள் பிள்ளைகளையும் நேர்மையாக இருக்க வற்புறுத்துங்கள் (கொலோ. 3 : 24, 25)

K is for Knowing. உங்கள் பிள்ளைகளுடைய நண்பர்களையும் அவர்களுடைய பெற்றோர்களையும், உங்கள் பிள்ளைகளுடைய ஆசிரியர், ஆசிரியைகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

L is for Listening. உங்கள் பிள்ளைகள் சொல்லுவதை கவனியுங்கள். அது மற்றவர்கள் சொல்லுவதை அவர்கள் கவனிக்கும்படி போதிக்கும் (யாக். 1:19).

M is for Morals. உங்கள் நல்நடத்தை சரியாக உள்ளதா என்பதில் கவனமாயிருக்க வேண்டும் (1பேதுரு 1:15).

N is for No. : சில காரியங்களை செய்யக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருங்கள்... செய்யாதிருப்பாயாக (யாத். 20:13-16).

O is for Over-reacting. பிள்ளைகளும் மாம்சமானவர்கள் என்று அறிந்து மட்டாய் தண்டியுங்கள். ஏதோ உலகம் முடிய போகிறது என நினைத்து செயல்படாதிருங்கள் (சங். 78 : 39).

P is for Pressure. பிள்ளைகள் மேல் உள்ள அழுத்தத்தை குறையுங்கள். ஆனால் அவர்கள் நல்ல நிலையை நிர்வகிக்க சொல்லுங்கள் (பிலி. 3 : 13).

Q is for Questions. அவர்கள் கேள்விகளை கவனமாய் கேட்டு எளிதான பதிலை கொடுங்கள். (1பேதுரு 3 : 15).

R is for Respect. மதிப்பை காண்பியுங்கள். மதிப்பை கற்றுக்கொடுங்கள். மதிப்பை பெற்றுக் கொள்ளுங்கள் (எபே. 6 : 24).

S is for Source of Strength. உங்கள் நம்பிக்கையும் விசுவாசத்தையும் உங்கள் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். விசுவாசம் வாழ்க்கையின் கொந்தளிப்புகளில் நல்ல துறைமுகமாக அமையும் (உபா. 6 : 6 -8)

T is for Togetherness. விசேஷமான நேரங்களில் எல்லோரும் ஒன்று சேர வேண்டும். ஆனால் எப்பொழுது பிள்ளைகள் தனியே செல்ல வேண்டும் என்பதை அறிய வேண்டும் .

U is for Uniqueness. ஒவ்வொரு பிள்ளைகளுடைய ஒப்பற்ற தன்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

V is for Voice. நாம் பேசும் வார்த்தைகளை விட நம்முடைய குரல் தொனி பல செய்திகளை பிள்ளைகளுக்கு தெரிவிக்கும் (நீதி. 15 : 1).

W is for Words. உங்கள் வார்த்தைகளை காத்துக்கொள்ளுங்கள். நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் நம்பிக்கையை இழக்க வைக்கும் (பிர. 5 : 5).

X is for Xamine. தொடர்ச்சியாக பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்.

Y is for You. உங்கள் சரீர, ஆவிக்குரிய, மன நிலைகளை நன்றாக பராமரியுங்கள். மகிழ்ச்சியுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்க உதவி செய்வார்கள்.

Z is for Zeal. கர்த்தருக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது உங்கள் பிள்ளைகள் கர்த்தரை உண்மையாய் பின்பற்றுவார்கள் (ரோமர் 12 : 11).

# 12 Qualities of an Influential Person

Everyone should strive to be an influential individual. When you are influential, you have more control over your life, your finances and how you are treated and your statements hold more weight with your listeners.

Some people claim that all you have to do is have money and you will be influential, but that is not true. Yes, people listen to someone with a lot of money more than they will to someone who only has less money to their name, but money alone does not make you influential.Truly influential people have the following characteristics.

1. **They have integrity.** Their word is their bond. When they say that they will do something, they always follow through with it. They don't steal or cheat.
2. **They have an optimistic attitude** .They always think a glass is half full and that everything is possible.
3. **Excellence is their password.** Everything they do is done to the best of their ability. They never settle for second best in any aspect of their life or behavior.
4. **They are decisive.** They know what they want and they make decisions quickly.
5. **They are goal setters.** Quick decisions are followed by setting a goal to ensure that the necessary steps are in place to reach the desired result.
6. **They make a commitment to everything they do.** They commit to work harder at everything they attempt and never give up.
7. **They set priorities.** They ensure that an important thing is handled first and a less important thing is done later.
8. **They are very good with relationships.** They are loyal to their friends and family and fair to everyone they encounter.
9. **They are full of self confidence.** There is no doubt in them about their capabilities because they know that they can handle anything life throws at them.
10. **They practice good time management.** They ensure that time is not wasted on frivolous things and that important things get the time that they deserve.
11. **They show gratitude** for what they have and generosity to those in need.
12. **They are self motivated.** They do not need any outside influence to motivate any of their actions as they have the ability to provide all the motivation they need to accomplish any task.

If you can master these twelve characteristics you will be amazed at how influential you become in all facets of your life. Pick one of these traits and practice it daily until it becomes second nature to you. When you have mastered it, go on to the next one. Yes, it will take time to master them all, but think of the future you will have when you do. The sooner you start, the sooner you will become the master of your destiny."

By Gilbert Griffiths



# பரிசுத்த ஆவியை பெறுவோம்! சாட்சியாக வாழுவோம்!!


## Rev. V.J. பாலஸ்

தலைமைப் போதகர்,
சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை


நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவை சுமந்து இரத்தம் சிந்தி மரித்தார். அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை பிலாத்துவினிடத்தில் கேட்டு வாங்கி, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப்போனான். பிரதான ஆசாரியரும், பரிசேயரும் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் சொன்னபடி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உலகத்தின் எந்த சாத்தானாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு புரட்டி வைக்கப்பட்ட பெரிய கல்லோ, வெளியே அமர்த்தப்பட்ட காவல் சேவகரோ தடைசெய்ய முடியவில்லை. ஏனென்றால் அவர் ஒருவரே வானம், பூமி யாவையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன்.

தொடர்ந்து இயேசு கிறிஸ்து தம்மை உயிரோடிருக்கிறவராக இந்த பூமியில் 40 நாட்கள் நிரூபித்தார். பரமேறுவதற்கு முன்பாக “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருப்பேன் என்றார்” (மத்.28:18-20). ஆனால் இந்த கடைசி கட்டளையை நிறைவேறுவதற்கு முன்பாக செய்ய வேண்டிய ஒரு முக்கியமான காரியத்தை இயேசு சொன்னர்: பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற எருசலேமை விட்டுப்போகாமல் காத்திருங்கள் என்றார். இன்றைக்கு நாம் எல்லாரும் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிப்பது நமக்கு இயேசு கொடுத்த கடைசி கட்டளை. ஆனால் இதை நிறைவேற்ற நமக்கு கொடுக்கப்பட்ட இன்னொரு கட்டளை பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டு, அவரால் அனுதினமும் வழிநடத்தப்படுவது. நம்முடைய வாழ்க்கையில் சாட்சியின் ஜீவியம் அவசியம்.

இந்த பரிசுத்த ஆவியானவரை காத்திருந்து பெற்றுக்கொள்ளும்போதுதான் பெலனடைகிறோம். சாட்சிகளாய் வாழ்கிறோம். இதை ஆண்டவர் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். உன்னத பெலத்தோடு, சாட்சியின் ஜீவியத்தோடு சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிக்கும்போது தான் ஆத்துமாக்கள் இயேசுவிடம் வருவார்கள். பாவிகள் இரட்சிப்பை பெறுவார்கள். பரலோகத்திற்கு சொந்தமாவார்கள். பலத்த கிரியைகள் நடைபெறும். ஜீவனுள்ள ஆண்டவர் இயேசுவின் பரிசுத்த வசனம் அகிலமெல்லாம் பரவும். பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் செய்யப்படுகிற அனைத்து ஊழியங்களும், வெறுமையாகவும், சுயமேன்மைக்காகவே இருக்கும். ஆகவே நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், ஊழியத்திலும், குடும்பத்திலும் பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து செயல்பட வேண்டும். இயேசுவின் உயர்த்தெழுந்த செய்தியை உலகத்திற்கு அறிவிப்போம். இயேசுவின் இரகசிய வருகையிலே நாம் ஒன்றாய் இயேசுவை சந்திப்போம். அதற்கு ஆயத்தப்படுவோம். ஆயத்தப்படுத்துவோம். ஆமென்.

# உயிருள்ள விசுவாசம்

(எபிரெயர் 11 லிருந்து படிப்பினைகள்)

1. விசுவாசம் நற்சாட்சி பெறுகிறது. (வச 2)
2. விசுவாசம் இறைவார்த்தையின் படைக்கும் வல்லமையைப் புரிந்துகொள்கிறது. (வச 3)
3. விசுவாசம் கடவுளுக்கு முதலும் உச்சிதமுமானதைப் படைக்கிறது. (வச 4)
4. விசுவாசம் எல்லாவற்றிலும் தேவனைப் பிரியப்படுத்த முயலுகிறது. (வச 5)
5. விசுவாசம் உண்மையான ஜெபத்திற்குத் தேவன் பதிலளிக்கிறார் என்று நம்புகிறது. (வச 6)
6. விசுவாசம் கடவுளது எச்சரிப்புகளை உன்னிப்பாய்க் கவனிக்கிறது. (வச 7)
7. விசுவாசம் கேள்வி கேட்காமல் கடவுளுக்குக் கீழ்ப்படிகிறது. (வச 8)
8. விசுவாசம் புதிய களங்களைக் கைப்பற்ற துணிவுடன் புறப்படுகிறது. (வச 9)
9. விசுவாசம் நித்திய நோக்குடன் வாழ்கிறது. (வச 10)
10. விசுவாசம் ஆண்டவரை மட்டும் நோக்கிப் பார்த்து முடியாதவைகளைப் பார்த்து நகைக்கிறது. (வச 11)
11. விசுவாசம், " இவ்வுலகு எனக்குச் சொந்தமல்ல; நான் இங்கு ஓர் பரதேசி என்று அறியப்படுகிறது. (வச 13, 38)
12. விசுவாசம் பரலோகமே, என் சொந்தமே என்று காண்பேனோ என்று பாடிக்கொண்டிருக் கிறது. (வச 14, 16)
13. விசுவாசம் பின்திரும்புவதில்லை. (வச 15)
14. விசுவாசம் எந்த ஆசீர்வாதத்தையும் திரும்பக் கடவுளுக்கே படைத்து விடத் தயங்குவதில்லை. (வச 17)
15. விசுவாசம் தேவனது உயிரோடெழுப்பும் வல்லமையைச் சார்ந்திருக்கிறது. (வச 19, 35அ)
16. விசுவாசம் இனிவரும் தலைமுறைகளுக்குத் தீர்க்கதரிசனச் செய்திகளை விட்டுச்செல்லுகிறது. (வச 20-22)
17. விசுவாசம் பயமுறுத்தல்களுக்குப் பயப்படாமல் தேவனது பாதுகாக்கும் வல்லமையைப் பற்றிக் கொள்ளுகிறது. (வச 23)
18. விசுவாசம் இவ்வுலகச் செல்வாக்கைப் பெரிதாக நினைப்பதில்லை. (வச 24)
19. விசுவாசம் பாவச் சோதனைக்கு மறுப்பு தெரிவிக்கிறது. (வச 25)
20. விசுவாசம் பாடுபடும் இறைமக்களோடு தன்னார்வமாய்ச் சேர்ந்துக்கொள்ளுகிறது. (வச 25)
21. விசுவாசம் பணத்தைக் கும்பிடுவதில்லை. (வச 26)
22. விசுவாசம் இவ்வுலகின் எந்த அதிகாரத்திற்கும் அஞ்சாது பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிகிறது. (வச 27)
23. விசுவாசம் கிறிஸ்துவின் இரத்தத்திற்குள் மறைந்து கொள்ளுகிறது. (வச 28)
24. விசுவாசம் முடியாதவைகளையும் முயற்சித்துப் பார்க்கிறது. (வச 29)
25. விசுவாசம் எளிதில் எதையும் விட்டுவிடாது. (வச 30)
26. விசுவாசம் பிசாசின் பெருந்திரளைச் சேராது தேவனின் சிறுமந்தையோடு இணைந்து கொள்ளுகிறது. (வச 31)
27. விசுவாசம் நீதிநெறியை நடப்பித்துக் காட்டுகிறது. (வச 33)
28. விசுவாசம் தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறது; தேவனுக்காகப் பெரிய காரியங்களை செய்ய முயற்சிக்கிறது. (வச 32-34)
29. விசுவாசம் எவ்வித துன்பத்தையும், ஏன் மரணத்தையுமே சந்திக்க வேண்டியதிருந்தாலும், தனது உன்னதக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காது. (வச 35-37)
30. விசுவாசம் கேலியை கேலி செய்யும். (வச 36)

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று
உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். (2 கொரி. 13:5)

நன்றி : ஆசீர்வாதம்



# ஜாலி டேஸை
# சிறந்த முறையில் செலவிடுங்கள்
## Spend Your Jolly Days Wisely

**Rev. பெகின் சாமுவேல்** (AGCM Director)

*Parents' special*

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த ஆண்டு முதன் முதலாக நமது AGCM ஊழியங்கள் மூலமாக VBS பாடத்திட்டங்கள் உருவாக்கவும், தமிழ்நாட்டின் பல இடங்களில் பயிற்சி முகாம்கள் நடத்தி ஆசிரியர்களை பயிற்றுவிக்கவும் தேவன் உதவி செய்தார். இதற்காக உழைத்த, ஜெபித்த மற்றும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன். இம்மாதத்தில் சபைகளில், கிராமங்களில் நடைபெறுகிற VBS ஊழியங்களை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

கோடை விடுமுறை வந்துவிட்டாலே குழந்தைகளுக்கு கொண்டாட்டம்தான். அதிலும் இந்த வருடம் சில நாட்கள் அதிகமாகவே விடுமுறை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பிள்ளைகளும், பெற்றோர்களாகிய நீங்களும் இருக்கின்றீர்கள். விடுமுறை நாட்களை எவ்வாறு பயனுள்ளதாக கழிப்பது என்று பல பத்திரிக்கைகளில் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனாலும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகள் சரியான முறையில் இந்த நாட்களை கழிக்க உதவி செய்வோம். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று வேதம் சொல்லுகிறது (எபே. 5.16). எவ்வாறு உங்கள் குழந்தைகள் இந்த விடுமுறை நாட்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வது? இதோ சில டிப்ஸ்கள் உங்களுக்காக:

### 1. விடுமுறை வேதாகம பள்ளியில் நேரத்தை செலவழிக்கட்டும்:
### (Spend time in VBS)

சபையில் நடைபெறும் VBS நாட்களை குறித்து வைத்து தவறாமல் அந்த நாட்களில் உங்கள் பிள்ளைகள் அதில் கலந்து கொள்ள பெற்றோர்களாகிய நீங்கள் உதவிசெய்யுங்கள். அந்த நாட்களில் எந்த ஒரு சுற்றுலாக்களுக்கோ, சிறப்பு வகுப்புகளுக்கோ அனுப்ப வேண்டாம். 12 ம் வகுப்பு வரை பயிலும் பிள்ளைகள் மாணவர்களாகவும், கல்லூரி பயிலும் பிள்ளைகள் ஆசிரியர்களாகவும் பங்குபெறலாம். எனவே, யாரும் விதிவிலக்கல்ல. தேவனுக்குரிய காரியத்திற்கு முதலிடம் கொடுத்து செயல்படுங்கள். அதற்கேற்ற பலனை நீங்கள் உங்கள் வாழ்வில் காண்பீர்கள்.

### 2. தேவனைப் பற்றி அறிவதில் நேரத்தை செலவழிக்கட்டும்:
### (Spend time in knowing God)

சிறு பிள்ளைகள் இருப்பார்களானால் அவர்களை கார்ட்டுனை பார்ப்பதிலேயே நேரம் செலவிட விடாமல் அவர்கள் வயதுக்கு ஏற்றாற்போல வேதாகம கதாபாத்திரங்களைக் குறித்து அறிந்து கொள்வதற்கேதுவாக சில DVD (தானியேல், நோவா...) வாங்கிக் கொடுக்கலாம். எப்போதுமே கேட்பதைக் காட்டிலும்

அவர்கள் அந்த சரித்திரங்களைப் பார்க்கும் போது அவர்கள் மனதில் நீங்காது நிலை நிற்கும். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான் (ஏசாயா 38.19) என்று வேதம் சொல்கிறது. பிள்ளைகளுக்கு நம்மால் இயன்ற அளவு தேவனைப் பற்றி கற்றுக்கொடுப்பது நம்முடைய கடமை. அதை நாம் சரியாய் செய்வோமாக.

## 3. ஜெபத்திலும், வேதத்தைக் கற்றுக்கொள்வதிலும் நேரத்தை செலவழிக்கட்டும்:

**(Spend time in prayer and learning Bible)**

ஜெபிக்கவும், வேதம் வாசித்து வசனங்களை மனப்பாடம் செய்யவும் ஊக்குவியுங்கள். அதை அவர்களுக்கு கற்றுக்கொடுப்பது பெற்றோர்களாகிய உங்கள் கடமை. எதையும் அவர்கள் விரும்பத்தகாத வகையில் திணிக்காமல், சில சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுங்கள். குடும்ப ஜெபங்களில் மட்டுமல்லாது, வெளியூர்களுக்கு செல்லும் முன், காரில் அமர்ந்து உங்கள் பயணங்களை ஆரம்பிக்கும் முன், குடும்பமாக அமர்ந்து சாப்பிடும் போது ஜெபிப்பதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பமளிக்கலாம். அவர்களும் ஜெபத்தின் மேன்மையை கற்றுக்கொள்ளட்டுமே.

ஞாயிறு பள்ளிகளில் நடைபெறும் தேர்வுகளுக்கு, வேதவினா தேர்வுகளுக்கென்று இந்த நாட்களில் உங்கள் பிள்ளைகளோடு அமர்ந்து அவர்களை தயார்படுத்துங்கள். பள்ளித் தேர்வுகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் காட்டிலும் நாம் வேத வசனங்களைக் கற்றுக் கொள்ள பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவோம். ஏனெனில் இயேசு சொல்கிறார். 'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை' (லூக்கா 21. 33).

இவ்வாறு நாம் செய்யும் போது நம்முடைய பிள்ளைகளைத் தேவன் ஆசீர்வதிப்பார். நாமும் தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறவர்களா யிருப்போம். ...கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே.6.4). தேவன் தாமே உங்களையும், அவர் உங்களுக்குக் கொடுத்த உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---




உங்கள் சபைகளில்,
கிராமங்களில் நடைபெறும்
VBS ஊழியங்களில் ஆசிரியராக
வாலன்டியராக பங்குபெற்று
ஊழியம் செய்யுங்கள்.
மேலும் இந்த ஊழியத்தை
ஜெபத்தினாலும்
பொருளாதாரத்தினாலும்
தாங்குங்கள்.
கர்த்தர் தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக.

## A.G. தமிழ் நாடு வேதாகமக் கல்லூரி
## தொடர் கல்வித்துறை (Modular Studies Department)
## வழங்கும் பட்டப் படிப்புகள்

1. Post Graduate Diploma in Christian Ministry - 1 Year
2. Master of Arts in Christian Ministry - 2 years
3. Master of Divinity - 3 years
   For college Graduate who are involved in ministry
   Medium in instruction - English

- ஒவ்வொரு மாதமும் 5 நாட்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை) AGTBC யில் தங்கி வகுப்புகள் மற்றும் நூலகத்தில் கற்றும், மூன்று வாரங்கள் சொந்த இடங்களில் ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டே ஆராய்ச்சி கட்டுரை (assignment) எழுதியும், தேர்வுக்கு ஆயத்தமாகியும் ஒவ்வொரு பாடமாக முடிக்கும் தொடர் கல்வி முறை.
- ஓராண்டில் 10 பாடங்கள் முடித்தபின் P.G.D.C.M. முதுகலை பட்டயச் சான்றிதழ்
- இரு ஆண்டுகளில் 20 பாடங்கள் முடித்தபின் M.A. in Christian Ministry பட்டம்
- மூன்று ஆண்டுகளில் 30 பாடங்கள் முடித்தபின் M.Div. பட்டம்

பட்டப்படிப்பு முடித்து ஊழியத்தில் ஈடுபட்டிருப்பதால் கல்லூரியில் தங்கிப்படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் இப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
வகுப்புகள் ஜூன் 2018-ல் துவங்கும்.

| Dr. T.S. Rajasekar | Rev. I. Baskaran | Rev. S. Lindsey Jones |
|---|---|---|
| Principal | Administrator-Academic | Administrator-Student Service |
| | Cell : 99440 82418 | Cell : 98941 36692 |


## பெண்கள் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் - அறிக்கை

A.G. தமிழ் பிரதேச பெண்கள் ஊழிய ஒருங்கிணைப்பாளர் முகாம் 2018, ஜனவரி 29,30 தேதிகளில் மதுரை சரந்தாங்கியில் நடைபெற்றது. தமிழ் பிரதேச மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் 130 பேர் கலந்துகொண்டனர். முகாம் 29-ம் தேதி காலை 10.00 மணி முதல் 30-ம் தேதி மதியம் 1:30 மணி வரை நடைபெற்றது. முகாமினை A.G. அகில இந்திய பெண்கள் ஊழிய தலைவர் சகோதரி.**கெட்சியாள் மோகன்**. தமிழ் பிரதேச பெண்கள் ஊழிய தலைவிகள் சகோதரி **நிர்மலா ஜெயராஜ்**, **Dr. ராணி ஜெயசந்திரன்** ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

முதல் பகுதி நாமக்கல் மண்டல ஒருங்கிணைப்பாளர் நடத்திய துதி ஆராதனையோடு துவங்கியது. சகோதரி. **கெட்சியாள் மோகன்** அவர்கள் முகாமின் கருப்பொருளினை **"எழும்பிப் பிரகாசி"** அறிமுகம் செய்து, ஏசாயா 60 : 1-4 வசனங்களை முன்வைத்து **"Stand up and Stand out with excellent attitude"** என்று விளக்கம் அளித்து, தாவீது தானியேல், யோசேப்பு, மீரியாம், தெபோராள், பிரிஸ்கில்லாள் போன்றோர் எழும்பிப் பிரகாசித்த விதங்களைக் காட்டி தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்வில் கிறிஸ்துவுக்காய் இந்த இருள் நிறைந்த உலகில் எழும்பிப் பிரகாசிக்க வேண்டிய கட்டாயத்தை சிறப்புற வலியுறுத்தினார்கள். இரண்டாம் பகுதியில் சகோதரி. **நிர்மலா ஜெயராஜ்** அவர்கள் "ஊழியத்தில் எழும்பிப் பிரகாசிக்க" சில தலைமைத்துவ பண்புகளைக்குறித்து தேவ செய்தியளித்தார்கள். மதிய இடைவேளைக்குப்பின் மாலை

4:30 மணிக்கு முகாம் துவக்கப்பட்டு தனிப்பட்ட வாழ்வில் குடும்பத்தில் சபை ஊழியத்தில் "எழும்பிப் பிரகாசிக்க" ஏற்படுகிற தடைகளைக் குறித்து குழு கலந்துரையாடல் நடைபெற்று, கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாலை பகுதியில் **Dr. ராணி ஜெயச்சந்திரன்** அவர்கள் "நமக்குள்ளே இருக்கிற வெளிச்சத்தை பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு பிரகாசிக்கச் செய்ய வேண்டிய" கட்டாயத்தை விளக்கி, வல்லமையான அபிஷேக ஆராதனைக்குள் நடத்தினார்கள்.

இரண்டாம் நாள் அதிகாலை ஆராதனையை வேலூர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் நடத்தினார்கள். சகோதரி. கிறிஸ்டினா பால் (வேலூர் மண்டலம்) **"கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றின் காலேப்"** என்ற தலைப்பில் தேவசெய்தி யளித்தார்கள்.

இரண்டாம் நாள் உபவாச ஜெபநாளாக நடைபெற்றது. சகோதரி.**கெட்சியாள் மோகன்** மற்றும் **Dr. ராணி ஜெயச்சந்திரன்** முன்னின்று நடத்தினர். முகாமின் இறுதியில் சகோதரி **டெய்சி முல்லர்** (வேலூர் மண்டலம்) அவர்கள் மருத்துவ முகாமின் ஆலோசனைகள் வழங்கியது யாவருக்கும் பிரயோஜனமாயிருந்தது. முகாமின் ஏற்பாடுகளை மதுரை மண்டலம் சகோதரி. **ரெஜினா அலெக்ஸாண்டர், சகோதரி.பெல்லா கொர்பான் சிங்** மற்றும் **குழுவினர்** நேர்த்தியாய் செய்திருந்தனர்.

இந்த ஆண்டில் நமது A.G. பெண்கள் ஊழியத்தின் மூலம் நமது சபைகள் எழும்பி பிரகாசிக்க தேவன் கிருபை செய்வாராக.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 70

சரியான விடைகள்

1. எலியாதா - பராக்கிரமசாலி
2. யாகீன், போவாஸ் - தூண்கள்
3. உசியா - வெள்ளாண்மைப் பிரியன்
4. இல்க்கியா - ஆசாரியன்
5. யோராம் - சேஷ்ட புத்திரன்
6. பெராக்கா - ஸ்தோத்திரம்
7. எசேக்கியா - அணை கட்டியவன்
8. உல்தாள் - தீர்க்கதரசி
9. அபி - புத்திமானாகிய நிபுணன்
10. ஓதேத் - கர்த்தருடைய தீர்க்கதரிசி
11. செமாயா - தேவனுடைய மனுஷன்
12. மனாசே - வெண்கல சங்கிலி
13. செப்பத்தா - பள்ளத்தாக்கு
14. யெரொபெயாம் - நேபாத்தின் குமாரன்
15. தர்ஷீஸ் - கப்பல்கள்
16. எரேமியா - புலம்பல் பாடியவன்
17. கீதரோன் - ஆறு
18. தில்காத்பில்நேசர் - அசீரியா ராஜா
19. மிகாயா - இம்லாவின் குமாரன்
20. மோரியா - மலை

## போட்டி எண் : 70 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : ஸ்வீட்லின்; மாது; G.முத்துலெட்சுமி; மரகதம்; மாரிமுத்து; தமிழ்செல்வி; சுபா; G.ஜெயா; A.மஞ்சு; ராதாமணி; காவ்யா; அமுதா; புனிதவள்ளி; சொர்ணமதி; பியூலா; டோரா; S.முத்துலெட்சுமி; மகேஸ்வரி; கலா; T.ஜெபா; விஜி K.M; அபி; நளினி; கோகிலா; கலா; குனோரி; சித்ரா; K.விஜி; கந்தையா; K.மஞ்சு; கிரிஜா; புஷ்பவள்ளி;| **ஸ்ரீவில்லிபுத்தூர்** : விக்டர் பிரேம்; சுகந்திகல்; கிறிஸ்டிபிரியா; மெசி; தேவபிரியா; பாஞ்சாலி; சத்யா; நித்யா; அனிதா; ஜெயராணி; ஆபிரகாம்; ஞானம்; மகதலேனா மரியாள்; ஷேரன்; ஷீபா செல்வராணி; மேரி; இவாஞ்சலின் ஏனோஸ்; ஜெசிக்கா ஏனோஸ்; டெய்சி ராணி; | **ஆலங்குளம்** : லதா; ரோஸ்லின்; ரெஜினா சாரு; உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; பெர்சியாள்; ஸ்டெல்லா; புஷ்பவதி; | **எடப்பாடி** : அஞ்சலி; எப்சிபா; சுதா; ரெஜினா; வனிதா; பாக்கியம்; ரூத்; லீதியாள்; | **திருச்சி** : நான்சி; சுகந்தி; கிறிஸ்டி மகாலஷ்மி; தனபாக்கியவதி; மேரி சுஜாதா; செல்வி; சாந்தி; | **கடையநல்லூர்** :தங்கராஜ்; ஸ்டெல்லா; மேரி குட்டி; ஆஷா தேவி; வினோலியா; செல்வி இந்திராணி; | **கொட்டாகுளம்** : எலிசபெத்; ஏஞ்சல்ராணி; ஜான்சிராணி; ஜெபமேரி; ரக்ஷனா; ரெஜினா; | **தேனி** : பூங்கோதை; ஜெபபிரியா; லீலாவதி; திரவியச்செல்வி; மீனா; | **நாசரேத்** : தாசன் மோசஸ்; மெர்சி; பரிபூரணம்; மேரி; ஜெபிபாய்; | **ஆறுமுகநேரி** : கஸ்தூரி; பிரேமா; ஜாய்ஸ்மேரி; வெண்ணிலா எஸ்தர்; பானுமதி; **கோபி** : சுஜா; சௌத்திரி; ருக்மணி; சந்தோஷ்; | **மதுரை** : சிவக்குமார்; அமுதா; மேரி; பால்; மோனிஸ்ராஜ்; | **புளியங்குடி** : ஜெயமணி; சுந்தரி; ஞானமணி; பிரின்ஸி ஜாய்;| **கிருஷ்ணகிரி** : அபிநயா; அனிதா ஷைலா; ரேச்சல் அனுசுயா; ஆனி மெர்சி; |**திருத்துறைப்பூண்டி** : மெர்லின்; ஹெப்சி ஜெபராஜம்; ஆர்த்தி; சண்முகம்; சரவணன்; ஜெயந்தி;|**வத்ராப்** : கிறிஸ்டி; அருள்செல்வி; ஜெபராணி; பிரிஸ்கில்லா; |**பரமத்திவேலூர்** : கெத்சியாள் பூவிழி; பாமா; கார்த்தி சாமுவேல்; திருச்செல்வி; |**வந்தவாசி** : ஜூலியட்; நித்யா; சுமதி; விஜயா; |**தூத்துக்குடி** : கெத்சியாள்; ஸ்டார்லினா; வால்டர்சிங்; தேன்மொழி; |**சென்னை** : எலிசபெத்; மெர்லின் ஹெலன் பிரித்தியா; தாமரைச்செல்வி; கிருபாகரன் தாமஸ்; பியூலா; ஜெயந்தி; |**திருநின்றவூர்** : ஜென்சி; வின்சி; லாலி; எழிலரசி; |**செய்யூர்** : விஜயா; சாம்பாலாஜி; எட்வர்ட்; ஆல்பட் சிவா;| **ஆண்டிபட்டி** : தேவபாக்கியம்; மேரி; புளோரியா; |**சாத்தூர்** : சங்கீதா; ஜான்சி; லாவண்யா; |**முத்தையாபுரம்** : ஜீவிதா; மங்களம்; காபிரியேல் அந்தோனி; |**வடக்கு ஆத்தூர்** : மகேஸ்வரி; டேவிஸா; ரூத் பாக்கியவதி; |**கிச்சிப்பாளையம்** : சாரோன் ஜெயரூபி; கிறிஸ்டல் ஜான்; ராணி; |**அச்சிறுப்பாக்கம்** : செல்வகுமாரி; ஸ்டீவர்ட்; ஸ்டீவாக்; தமிழ்ச்செல்வி; |**வேலூர்** : கிருபாகரன்; கிறிஸ்டி; |**புதுச்சேரி** : குப்பம்மாள்; ஷீபா; |**பள்ளிக்கரணை** :ஜோதி; கீதா மகேஸ்வரி; |**தஞ்சாவூர்** : விஜி; மீனா;| **சேத்துப்பட்டு** : அமலசெல்வி; இம்மானுவேல் எபினேசர்; |**செம்பாக்கம்** : ஜெயலட்சுமி; மரகதலீலா; |**சிட்லபாக்கம்** : ஜோதி;ரெபெக்கா; |**அரும்பாக்கம்** : ஜெனிட்டா தங்கராணி; மேரி; |**காரைக்கால்** : ராஜாமணி; உமா; |**திசையன்விளை** : ஜெயசீலி; லீலா; |**கம்பம்** : ஜென்ஸி; ஜூலி ஆரோக்கியம்; |**தர்மபுரி** :ரூத் சித்ரா; எஸ்தர்;| **திருநெல்வேலி** : மதன்குமார்; டெய்சி லீலாபாய்; |**பாளையங்கோட்டை** :சுகத்தியா; மெர்யில் அலைஸ்; தெரசா; | **K.T.C.நகர்** : பிரேமாரூத், ஜோசப் பிரபாகரன்; |**உடுமலை** : கிரேஸ்மேரி; ஜாய்ஸ்மேரி; |**அந்தமான்** : விஜய்; ஜேக்லின்; |**வாணியம்பாடி** : அருணா; **காரைக்குடி** : லெபனான் பூங்குயில்; |**திருச்செந்தூர்:** பியூலா; |**திருவள்ளூர்**;ஏஞ்சல்;| **கோவில்பட்டி**: அகிலா ஜாய்; |**மரக்காணம்** : பிரான்சினாள்; |**பெங்களூர்** : தேவப்பிரியா; |**ஏர்காடு** : டேவிட்; |**ஏர்வாடி** : மரகதம்; |**தூனேரி** :ரூபி ஜூலியட்;| **பண்டலூர்** : ஏஞ்சலின் ஜரின்; |**அம்பலவானபுரம்** : நிர்மலா; |**காளையார்கோவில்** : அருளானந்தம்; சத்தியா; |**கோவைப்புதூர்** : சலோமி; |**பெருங்களம்** : ஹெப்சிபா; **பழையகாயல்** :எலிசபெத்;| **பழனி:** பிரீத்தி; |**கொத்தமங்களம்** : அபிஷா; **ஆசாரிபள்ளம்** : ஏஞ்சல்குமார்; |**சேலையூர்**

: பெர்சிஸ் ஜாய்; **பெரியகுப்பம்** : லில்லி; **சின்னாளபட்டி** : சலோமி; |**ஆழ்வார்குறிச்சி** : தெபொராள்; ஹறிலீலா; |**நாகமலை** : விஜிலா;ஹில்டா எலிசபெத்; |**நெய்வேலி** : மைதிலி; |**காசிமேஜர்புரம்** : ரூத் : |**கொங்கந்தான்பாறை** : சந்திரா; |**குத்துக்கல்வலசை** : நகோமி; |**கோணம்** ; மரியநேசம்: |**புதுக்கோட்டை** :லலிதா; |**காமராஜபுரம்** : ரவித்தா; |**வலையபட்டி** : ஜாயல்பெர்சிஸ்; |**வெள்ளோடு** : விசுவாசமேரி; |**அத்திபட்டி** : தனலட்சுமி; |**அரசூர்** : ரோஸ்லின்; |**நம்பியூர்** : சுகந்தி; **சொக்கன்புதூர்** : நிர்மலா; |**தாம்பரம்** : சிந்து; |**காஞ்சிபுரம்** : லூயிட்ஸ்சாந்தா; |**களக்காடு** : வசந்தா; |**ஆம்பூர்** : ரூபி; |**ஓசூர்** : ஐடா; |**இடையங்குளம்** : வயலட்மேரி ;| **நெய்யூர்** : ஷீலா; |**கடாட்சபுரம்** : ரேவதி ; | **காட்பாடி** : பால்பிச்சமுத்து; **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; **உவரி**; ஜேனட்; **அல்லம்பட்டி** : சாமிதாஸ் தாயம்மாள்| **கூடலூர்** : சுகிர்தா;| **இடையன்பாளையம் :** மேரி டென்சில்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 71

(எஸ்றா, நெகேமியா) பொருத்துக

| | தகப்பன் | | குமாரன் |
|---|---|---|---|
| 1. | மீகா | - | செக்கனியா |
| 2. | யெசுவா | - | பஸ்கூர் |
| 3. | சிக்ரி | - | எஸ்றா |
| 4. | உரியா | - | சகரியா |
| 5. | சாதோக் | - | சல்லும் |
| 6. | அராயா | - | யக்சியாவ் |
| 7. | செயல்தியேல் | - | சக்கூர் |
| 8. | எலியாசிப் | - | யோசபாத் |
| 9. | மல்கியா | - | நெகேமியா |
| 10. | ஆசகேல் | - | மத்தனியா |
| 11. | ஊர் | - | ஊசியேல் |
| 12. | கொல்லோசே | - | நொவதியா |
| 13. | ஆசாப் | - | யோவேல் |
| 14. | யெகியேல் | - | பாரூக் |
| 15. | இத்தோ | - | யோகனான் |
| 16. | செராயா | - | செருபாபேல் |
| 17. | திக்கா | - | மெரேமோத் |
| 18. | சாபா | - | மெசுல்லாம் |
| 19. | அகலியா | - | ரெப்பாயா |
| 20. | பின்னூய் | - | யோனத்தான் |

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.05.2018 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

திரித்துவ வேதாகம கல்லூரி பட்டமளிப்பு விழா – செங்கோட்டை 23.2.2018







AGVBS Training Camps



T.கல்லுப்பட்டி ஆலய பிரதிஷ்டை



Registered News Paper Regd. No. 8206 / 62

## Antioch Bible Seminary & College பட்டமளிப்பு விழா – பாண்டிச்சேரி










## Global University பட்டமளிப்பு விழா – தூத்துக்குடி 3.3.2018









BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165